Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்--12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 புரட்டாதி-09 25-09-2004 சனிக்கிழமை ஓசை -220




-காடுகளில் தேடியழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள-

# ஜெயந்தன் படையணி நடவடிக்கைக் குழுவே

# றெஜி உட்பட மூவரையும் சுட்டுக்கொன்றது!

## தப்பியோடியவர்கள் தேடப்படுகின்றனர்

(மட்டக்களப்பு)

**தேசவிரோத செயல்களில் சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டுவந்த கருணாவின் சகோதரன் றெஜி உட்பட மூன்று பேர் கொல்லப்பட்ட அதிரடித்தாக்குதலை தேடியழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஜெயந்தன் படையணியினரே மேற்கொண்டதாக மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறையின் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.**

அண்மைக் காலத்தில் தேச விரோதச் செயல்களில் ஈடுபட்டு வந்த கருணாவின் சகோதரனான றெஜி மற்றும் துமிலன், எழிலன் ஆகியோர், காடுகளில் தேடியழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் ஜெயந்தன் படையணி நடவடிக்கைக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து தொடர் இலக்கம் அழிக்கப்பட்ட ஆயுதங்கள், தொலைத் தொடர்பு கருவிகள், சில அதிகாரிகளுடனான தொடர்பு கள் பற்றிய முக்கிய ஆவணங்கள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன. இச் சம்பவம் மாதுறு ஓயா குளத்தின் அருகாமையிலிருக்கும் காட்டுப் பகுதியில் கடந்த 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் நிகழ்ந்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வார்த்தை ஜாலத்தைத் தவிர்த்து திடமான செயற்பாட்டைக் காட்டுக

### சனாதிபதியின் ஐ.நா. உரை குறித்து கூட்டமைப்பு அறிக்கை

வார்த்தை ஜால அறிக்கைகளைத் தவிர்த்து பேச்சு வார்த்தையின் வெற்றியை உறுதி செய்யக்கூடிய அர்த்தமுள்ள கருத்துடன்பாட்டைக் கட்டியெழுப்பி பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான மனத் திண்மையுடன் கூடிய செயற்பாட்டில் அக்கறை செலுத்தும்படி சனாதிபதியை நாம் வலியுறுத்துகிறோம் என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐ.நா.வில் ஆற்றிய உரையில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது. அவ்வறிக்கையில்,

பேச்சு வார்த்தை மேசைக்கு மீண் டும் வருவதற்கு விடுதலைப் புலி கள் இயக்கம் மறுக்கிறது" என்று சனாதிபதி ஐக்கியநாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் பேசும் போது (12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை சமாதான நடவடிக்கைகளில் ஐ.நா.பூரண ஒத்துழைப்பை வழங்கும்

### சனாதிபதியிடம் கொபி அனான் தெரிவிப்பு


(நியூயோர்க்)

இலங்கையில் சமாதான நடவடிக்கைகளுக்கு அவசியம் ஏற்படும் பட்சத்தில் ஐக்கியநாடுகள் நிறுவனம் பூரண ஒத்துழைப்பை வழங்குமென ஐ.நா. செயலாளர் நாயகம் கொபிஅனான் சனாதிபதி சந்திரிகாவிடம் உறுதியளித்துள்ளார். ஐக்கிய நாடுகள் தலைமை அலு வலகத்தில் நேற்று சனாதிபதி சந்திரிகாவுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட விருக்கும் புனரமைப்புகள் பற்றியும் அவர் விளக்கியுள்ளார். இச்சந்திப்பில் இலங்கையின் தற்போதைய நிலைமை, மற்றும் யுத்த நிறுத்த ஒப்பந்தம், சமாதான நடவடிக்கையின் தற போதைய நிலைமை என்பன பற்றி சனாதிபதி விளக்கமளித் துள்ளார். ஐ.நாடுகள் ஸ்தாபனத்தின் கீழுள்ள நிறுவனங்கள் இலங்கையின் அபிவிருத்திக்கு வழங்கும் உதவிகள்பற்றியும் தெரிவித்துள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்றொழிலாளர்கள் தொழில் விருத்திக்கென கடற்றொழிற்கல்லூரி விரைவில் அமைக்கப்படும்

### கடற்புலிகளின் சிறப்புத்தளபதி சூசை தெரிவிப்பு




(அலுவலக செய்தியாளர்)

கடற்றொழிலாளர்களின் தொழில்விருத்தியைக் கருத்திற்கொண்டு கடற்புலிகளின் பூரண ஆதரவுடன் முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தால் முல்லைத்தீவில் கடற்றொழில் கல்லூரி வெகுவிரைவில் அமைக்கப்படவுள் ளதாகக் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின்

(12 ஆம் பக்கம் பார்க்க)


## தியாகி லெப்.கேணல் திலீபன் நினைவாக நேற்று அடையாள உண்ணாவிரத நிகழ்வுகள்



தியாகி லெப்.கேணல் திலீபன் அவர்களின் 17ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் தமிழீழத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. நேற்று முதல் அடையாள உண்ணாவிரத நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் கிளிநொச்சி சந்திரன் பூங்காவில் காலை 8.56 இற்கு தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமான அடையாள உண்ணாவிரதம் பிற்பகல் 1. மணிக்கு நிறைவுற்றது. இதேபோன்று யாழ். பஸ்நிலையத்திலும் மருதனாமடம், சுன்னாகம், மற்றும் ஏனைய பகுதிகளிலும் அஞ்சலி நிகழ்வுகள் சிறப்புற நடைபெற்றன. புதுக்குடியிருப்பு

(12 ஆம் பக்கம் பார்க்க)



தியாகி லெப். கேணல் திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவு நாளையிட்டு முல்லை மாவட்ட கூட்டுறவாளர்களால் வடிவமைக்கப்பட்ட ஊர்தி

படப்பிடிப்பு:-தவரட்ணம்

*மக்கள் புரட்சி வெடிக்கட்டும்,அது நிச்சயமாகத்*

*தமிழீழத்தை எமது இறப்பின் மூலம்*

*பெற்றுத்தரும்.இதனை வானத்திலிருந்து*

*வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுடன்*

*சேர்ந்து நானும் பார்த்து மகிழ்வேன்.*

**தியாகி.லெப்.கேணல் திலீபன்**



## 04ஆம் ஆண்டு நினைவில்



### 2ஆம் லெப்: மலரினி

துரைசிங்கம் - லதா

பாலையடி மல்லாவி

வீரச்சாவு 2000.09.25

எம் தானைத் தலைவன் வழியில் சென்று, சாதனைகள் பல படைத்த என் தங்கை மலரினியே..! உன் நினைவால் நாம் வாழுகின்றோம். பலர் தம் குடும்பம் வாழ வென்று வெளியூர்சென்றபோது, தமிழ்மக்கள் வாழ்வுக்காக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து யாழ். செல்லும் படையணியின் மோட்டார் படைப்பிரிவிலும், அடுத்துமாலதி படையணியிலும் நாட்டை மீட்க காவல் காத்தாய்,

தங்கையே! சாவகச்சேரி மண்ணில் காவல் கடமையில் நின்றபோது அந்நியன் வீசிய குண்டுபட்டு, தமிழ் மண்ணை முத்தமிட்டு இன்று நான்காண்டுகள் ஆகின்றதே..!

தகவல்:-
**த.சிவதாசன்(தம்பி)**
ஞானிமடம்
பூநகரி.

(சி-10410)

## சாவு அறிவித்தல்

### பொன்னர் கதிரவேலு

புத்தூரைப் பிறப்பிடமாகவும், இல-42, D-10,உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் கதிரவேலு (புத்தூர்- இரத்தினம்) 24.09.2004 வெள்ளிக்கிழமை காலமானார். இவர் பொன்னர் சின்னப் பிள்ளை தம்பதிகளின் புதல்வரும்; காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, நாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்புமருமகனும்; இராசமணியின் அன்புக்கணவரும்; தெய்வேந்திரம் (சிவநகர்), தவஞ்ஞானம் (உருத்திரபுரம்) ஆகியோரின் அன்புத்தந்தையும்; காலஞ்சென்ற தளயசிங்கம், குணதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும்; சங்கீதா, பிரபு, கஜீபன், கஜீதா, திலீபா, கபிலன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார். இவரது இறுதிக்கிரியைகள் 26.09.2004 (ஞாயிற்றுக்கிழமை), காலை 10.00 மணிக்கு 51/1, சிவநகர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உருத்திரபுரம் பொதுமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**க.தெய்வேந்திரம்**
**(மகன்)**

(4918)

## கிடுகுகள் வழங்கல்

(கிளிநொச்சி)

மீளவேய்தல் திட்டத்தின் கீழ் அக்கராயன் பிரதேசத்தில் 63 வீடுகளிற்கும் கண்ணகைபுரத்தில் 40 வீடுகளிற்கும் போருட் நிறுவன நிதியுதவியுடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தால் கிடுகுகள். வழங்கப்பட்டுள்ளன.

(15)

## பரந்தன் இ.ம.வித்தியாலயத்தில் புதிய கட்டடத்திறப்பு விழா

(கண்டாவளை)

கிளி/பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தில் நிகொட் நிறுவனத்தால் புதிதாக அமைக்கப்பட்ட மாடிவகுப்பறை கட்டடத்திறப்பு விழா எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை முதல்வர் ம.பத்மநாபன் தலைமையில் நடைபெற உள்ளது. இந்நிகழ்வுக்கு கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரட்ணம் அவர்கள் முதன்மை விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக பரந்தன் பிரதேசப் பொறுப்பாளர் இன்பவாணனும் கலந்து கொள்ளவுள்ளனர்.


கிளி. நகரில் புதிய உதயம்

என்ன?
எங்கே?
எப்பொழுது?

மிகுதி நாளை இப்பகுதியில்...

(10411)



வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம்

வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம்
THE VANNI AGROTECHS

வேளாண் அபிவிருத்திக்கு நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய பொறிகள் கருவிகளை அறிமுகம் செய்து நியாய விலையில் வழங்கிய வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனத்தின் காட்சி அறையில்...

சிறப்பு விலையில்

புதிய ரபே உழு பொறியும் TAFE - 45 DL
மசிபேக்குசன் உழுபொறியும் MASSEY FERGUSON 240

இவற்றின் விற்பனைக்குப் பிந்திய சேவையும் உங்கள் அருகில் நிறைவேற்ற காத்திருக்கிறோம்




தலைமைப் பணிமனை: வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம், கண்டிச்சாலை, கிளிநொச்சி.

தொலைபேசி: 021.2285745
தொலைநகல்: 021.2285746

(சி10414)

# ஈராக்கில் வன்முறைகள் நாளுக்கு நாள் தீவிரம்

# தேர்தலையும் திட்டமிட்டவாறு நடத்த முடியாது!

## -அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் நேற்று அறிவிப்பு

(வோஷிங்டன்)

**ஈராக்கில்வன்முறைகள் அதிகரித்து வருவதனால் திட்டமிட்டபடி சனவரி மாதத்தில் தேர்தலை நடத்த முடியாதென அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் நேற்றுத் தெரிவித்துள்ளார்.**

ஈராக்கில் பல இடங்கள் தீவிரவாதிகளின் தாக்குதல் இலக்குகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் கடந்த இரண்டு வாரங்களில் இடம்பெற்ற மோதல்களில் 100பேர் வரைஉயிரிழந்துள்ளனர். இதனால் திட்டமிட்ட வகையில் தேர்தல் நடத்துவதில் சிக்கல்கள் தோன்றியுள்ளனவென அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை திட்டமிட்டவாறு ஈராக்கில் தேர்தலை நடத்த வேண்டுமெனவும். ஒத்திவைக்கும் எண்ணம் தமக்கு இல்லையெனவும் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சிடம் ஈராக்கிய இடைக்கால பிரதமர் இயாத் அல்லாவி நேற்று முன்தினம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க செனட்ஆய்வு சேவைகள் ஆணைக் குழுவில் கருத்து தெரிவிக்கும்போது அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளைஈராக்கில் வழமையான நிலை திரும்பி வருவதாகக் கூறிஅமெரிக்க மக்களை ஏமாற்ற புஷ் முயல்வதாக அமெரிக்க சனநாயகக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ஜோன்ஹெரி குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பணயக்கைதி விடுதலை

ஈராக்கில் ஒரு மாதத்துக்கு முன்பாகப் பிடித்துச் செல்லப்பட்ட ஜோர்தானிய பிணைக்கைதி விடுவிக்கப்பட்டுவிட்டார். விடுவிக்கப்பட்ட நிதல் கனானியின் (28) உறவினர்கள் இதைத் தெரிவித்தனர். கனானியை விடுவிக்க கடத்தலகாரர்கள்பணம்கேட்டிருந்தனர். ஆனால் எவ்வளவுபணம் கொடுக்கப்பட்டது என்றவிவரம் இது வரை வெளியாகவில்லை.



அமெரிக்காவின் பாங்கர்விமான நிலையத்திலிருந்து ஈராக்செல்லும் அமெரிக்க இராணுவத்தினருடன் நேற்று முன்தினம் கலந்துரையாடும் சனாதிபதி ஜோர்ஜ்டபிள்யுபுஷ்

# இங்கிலாந்து நாட்டவரை விரைவாக விடுவிக்க முன்னேற்றகரமான நடவடிக்கை இல்லை!

## -உறவினரின் வேண்டுகோளும் நிராகரிப்பு

ஈராக் தீவிரவாதிகளால் பணயம் வைக்கப்பட்டுள்ள இங்கிலாந்து நாட்டவரைக் காப்பாற்ற எந்த விதமான முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.இதனால் அவரது உயிருக்கு எவ்வேளையும் ஆபத்து ஏற்படலாம்என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கியப் பெண் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று கோரி, 2 அமெரிக்கர், 1 இங்கிலாந்துக்காரரென 3 பேரை தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர். அவர்களில் 2 அமெரிக்கர்களது தலையைத் துண்டித்துக் கொன்றுவிட்டனர். இங்கிலாந்துக்காரர் மட்டும் பணயக்கைதியாகத் தொடர்ந்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அமெரிக்கச் சிறையில் உள்ள 2 பெண் விஞ்ஞானிகளில் ஒருவரான ரிகாப் தாஹாவை விடுதலை செய்யலாம் என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார். தாஹாவை விடுதலை செய்ய ஈராக் பிரதமர் அல்லாவி எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார். இதுதொடர்பாக ஈராக் அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் "தாஹா தொடர்பான விசாரணை இன்னும் முடியவில்லை, எனவே அவரை விடுதலை செய்ய விருப்பமில்லை. தீவிரவாதிகளின் கோரிக்கைகளுக்கு ஈராக்அரசு தலைவணங்காது" என்று கூறியிருக்கிறார்.

இங்கிலாந்து நாட்டவரான பிக்லேயை விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி அவரது குடும்பத்தினர் இங்கிலாந்துப் பிரதமர் டோனி பிளேயரைக்கேட்டுக் கொண்டுள்ளனர்.

தீவிரவாதிகள் வெளியிட்டுள்ள ஒளிநாடாவில், பிக்லே, டோனி பிளேயருக்கு நேரடியாக விடுத்த வேண்டுகோளில், நான்சாக விரும்பவில்லை. என்னை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்.

"பிக்லேக்காகவும் அவரது குடும்பத்தினருக்காகவும் எங்கள் இதயம்பதறித்துடிக்கிறது. ஆனால் அந்த அனுதாபமும் , வேதனையும் எந்த வகையிலும் அரசின் நிலையை மாற்றாது. தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த மாட்டோம். அப்படி நடத்தினால், அது மேலும்பலரின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும்" என்று இங்கிலாந்து வெளியுறவு அமைச்சர் ஜக்ஸ்ரோ கூறியுள்ளார்.



பாக்தாத்திலுள்ள இத்தாலியத் தூதரகம் முன் வெடித்துச் சிதறிய மோட்டார் குண்டின் ஒரு பகுதி, ஐந்து குண்டுகள் விழுந்து வெடித்ததில் இரு பெண்கள் காயப்பட்டும், வீடுகள் சேதமடைந்தும் உள்ளன.

## 'பொடோ' வழக்குகளை வாபஸ் பெறுக!

பொடோ சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட அனைத்துவழக்குகளையும் வாபஸ் பெறவேண்டுமென்று தி.மு.க.தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.தமிழகத்தில் ஆறு பெண்கள் உட்பட 20 இற்கும் மேற்பட்டவர்கள் இன்னும் சிறையிலிருக்கின்றார்கள் அவர்கள் மீதான பொடோ வழக்குகளை வாபஸ் பெற வேண்டுமென்று சனநாயக முற்போக்குக் கூட்டணி சார்பில் தமிழக அரசை வலியுறுத்துவோம் எனக் கூறினார்.



பங்களாதேஷ் தலைநகர்டாக்காவிலிருந்து 250 கி.மீற்றர் தொலைவிலுள்ள நெட்மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்கள் நிவாரண உதவிகளை எதிர்பார்த்துள்ளார்கள்.

# கெயிட்டியில் இயற்கை அனர்த்தம் இரண்டாயிரம் பேர் உயிரிழப்பு!

கெயிட்டியில் ஏற்பட்டவெள்ளம் மற்றும் நிலச்சரிவினால் இதுவரை இரண்டயிரம் பேர் உயிரிழந்திருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது. ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் காணாமல் போயுள்ளனர்.

கரிபியன் கடல் பகுதி நாடான கெயிட்டில் ஒரு வாரகாலமாக கனமழை பொழிகின்றது புயலும் வீசுகிறது பல நகரங் களில் வெள்ளம்புகுந்துள்ளது வெள்ளத்தாலும் நிலச்சரிவிலும் சிக்கி 1070 பேர்பலியாகி உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இறந்தவர்களில் 1000பேரின் உடல்களே மீட்கப்பட்ட போதும் இறந்தவார்களின் தொகை 2000 இற்கும் அதிகமாக இருக்கும் என்று அஞ்சப்படுகின்றது.

வெள்ளம் காரணமாக பல்லாயிரக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து முகாம்களில் குடிநீர், உணவு இன்றி, தவித்து வருகின்றனர்.

சர்வதேசஉதவிகளை எதிர்பார்த்து இருப்பதாக பாதிக்கப்பட் மக்கள் தெரிவித்துள்ளனர்.

# 400 இந்திய மீனவர்களை விடுவிக்க பாகிஸ்தான் இணக்கம்

(திருவனந்தபுரம்)

பாகிஸ்தான் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 400 இந்திய மீனவர்களை விடுவிக்க பாகிஸ்தான் இணக்கம் தெரிவித்துள்ளது.

கேரளா வந்திருந்த இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதர் அஜீஸ் அகமதுகான் இந்தப் பிரச்சினை குறித்துக் கூறியதாவது "எல்லையைத் தாண்டி நுழைந்த 400 இந்திய மீனவர்கள் பாகிஸ்தான் சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த பிரச்சினையில் இந்தியா, பாகிஸ்தான் இடையே ஒருமித்த கருத்து ஏற்பட்டிருக்கிறது.

சிறைகளில் இருக்கும் 400 இந்திய மீனவர்களை விடுதலை செய்ய பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது. அவர்கள் இந்தியா திரும்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

இந்த மீனவர்கள் அனைவரும் கராச்சிக்கு அனுப்பிவைக்கப்பட்டு பிறகு அங்கிருந்து, அவர்களுடைய படகுகள் மூலம் திரும்புவார்கள் .வானிலை சீராகஇருந்தால் இவர்கள்விரைவாக அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று கூறினார்.

## எச்சரிக்கை

வடகொரியா அணுவாயுதத் திட்டமொன்றை முன்னெடுத்துச் செல்ல ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லையென்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.வடகொரியா அவ்வாறான திட்டமொன்றை முன்னெடுக்குமானால் அது பிராந்தியத்தில் பாரிய அச்சுறுத்தலுக்கு வழிவகுக்குமென்றும் அமெரிக்கா அச்சம் தெரிவித்துள்ளது.

# பாதுகாப்பு,சமூகத்துறை மேம்பாடடைய பாகிஸ்தானுக்கு ரூ.27 ஆயிரம் கோடி உதவி

(நியூயோர்க்)

பாகிஸ்தானுக்கு ரூ.27,600 கோடிநிதியுதவி வழங்கப்படும் என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் உறுதியளித்துள்ளார். அடுத்த 5 ஆண்டுகளில் பாதுகாப்பு மற்றும் சமூகத்துறைகளில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள பாகிஸ்தானுக்கு நிதியுதவி அளிப்பதாக அமெரிக்கா ஏற்கெனவே கூறியிருந்தது. அதைத் தற்போது புஷ் மீண்டும் உறுதிப் படுத்தியுள்ளார்.

நியூயோர்க்கில் புதன்கிழமை தன்னைச் சந்தித்த பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப்பிடம் புஷ் இதற்கான உறுதி மொழியை அளித்தார். 45 நிமிட சந்திப்புக்குப் பின் இருவரும் கூட்டாக அறிக்கை வெளியிட்டனர். அதில் இந்தியா-பாகிஸ்தான் உறவு மற்றும் துணைக்கண்டத்தின் பிரச்சினைகள் குறித்துளதுவும் கூறப்படவில்லை. மாறாக, அமெரிக்கா-பாகிஸ்தான் இடையே வர்த்தகம், பொருளாதாரம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் கூட்டுறவை விரிவுபடுத்தும் தீர்மானங்கள் இடம்பெற்றன.

முஸ்லிம் நாடுகள்பிரச்சினையை புதிய கண்ணோட்டத்துடன், நவீன கொள்கையுடன் அணுகு மாறு புஷ்ஷைக் கேட்டுக் கொண்டார் முஷாரப். பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய யுத்தம் குறித்து இருவரும் விவாதித்தனர். இப்போராட்டத்தில் இரு நாடுகளும் தொடர்ந்து இணைந்து பணியாற்றுவதை உறுதி செய்தனர். பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதக் குவிப்புக்கு எதிரான நடவடிக்கையைத் தொடரவேண்டும் என்று புஷ் வலியுறுத்தினார். அதைமுழுமுயற்சியுடன் தொடர்வதாகவும் முஷாரப் உறுதியளித்தார்.

## அணு விஞ்ஞானி காலமானார்

இந்தியாவின் பிரபல அணு விஞ்ஞானி டாக்டர் ராஜா ராமண்ணா செவ்வாய்க்கிழமை மும்பையில் காலமானார். அவருக்கு வயது 79. உடல்நலம் இல்லாமல் இருந்த அவர்கடந்த செவ்வாய்க்கிழமை மும்பையில் உள்ள ஒரு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு இரவு 7.30 மணியளவில் அவரது உயிர் பிரிந்தது. கடந்த 1974 ஆம் ஆண்டு ராஜஸ்தான் மாநிலம் பொக்ரானில் இந்திய அணுகுண்டு வெடித்ததில் ராஜா ராமண்ணா முக்கியபங்குவகித்தார்.

### தலைமைத்துவப் பயிற்சி

கண்டாவளைப் பிரதேச செயலர் சி. சத்தியசீலன் தலைமையில் வட-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கண்டாவளைப் பிரதேச அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் நிர்வாகத்தினருக்கான தலைமைத்துவப் பயிற்சி நடைபெற்றுள்ளது. இந் நிகழ்வில் முதன்மை விருந்தினர்.தி. இராசநாயகம் அவர்கள் சம்பிரதாயபூர்வமாக விளக்கேற்றி பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்தார்.

### பூநகரியில் டீசல் தட்டுப்பாடு

பூநகரியில் கடந்த சில தினங்களாக டீசல் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இந் நிலைமை தொடராமல் இருக்க உரியவர்கள் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் சில நாட்களின் பின்னர் மானாவரி விதைப்பும் ஆரம்பிக்க இருப்பதால் கூடிய அளவு டீசல் தேவை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (34)

### ஐந்துஅகதிகள் நாடுதிரும்பினர்

(மன்னார்)

இந்தியா வேலூர் மாவட்டம் குடியாட்டம் அகதிமுகாம் திருநெல்வேலி மாவட்டம் சுப்பிரமணியபுரம் அகதிகள் முகாம் ஆகியவற்றில் வசித்து வந்த ஐந்து இலங்கைத் தமிழ் அகதிகள் கடந்த புதன் கிழமை தாயகம் திரும்பியுள்ளனர். இவர்கள் அதிகாலையில் சிறிய படகு மூலம் இராமேஸ்வரத்தில் இருந்து தலைமன்னார் வந்து தலைமன்னார் பொலிசில் சரணடைந்தனர் இவர்களை பொலிசார் மன்னார் நீதி மன்றத்தில் முன் நிறுத்தியதையடுத்து மன்னார் நீதிபதி எம்.எம் அப்துல்லா, அவர்களின் சொந்த இடமான யாழ்ப்பாணம், மானிப்பாய் அரசடி வீதிக்கு அனுப்பி வைக்க உத்தரவிட்டார். இவர்களில் இரண்டு பெண்களும் 3 ஆண்களும் அடங்குவர். (மி).

# தியாகி திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு

# தமிழீழப் பிரதேசமெங்கும் பல்வேறு நிகழ்வுகள்!

தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தமிழீழப் பிரதேசமெங்கும் உண்ணாவிரதம், கடனுதவி வழங்கல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில், வட்டக்கச்சிப் பிரதேசத்தில் நேற்று வட்டக்கச்சி பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், பொது நிர்வாக உறுப்பினர்கள் அடையாள உண்ணாவிரதத்தினை மேற்கொண்டிருந்தனர்.

இதேபோன்று இன்று கிளி/ இராமநாதபுரம் மகாவித்தியாலய மாணவர்களும், நாளைய தினம் கிளி/ இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களும் மக்களும் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளவுள்ளனர்.

இதேபோன்று நேற்று முன்தினம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைச் சூழலில் சிரமதானப் பணி வடமராட்சி அரசியல்துறையினர் ஏற்பாட்டில் நடைபெற்றுள்ளது. இதில், தேசிய எழுச்சிப் பேரவையினர், மாணவர்கள், போராளிகள், கூட்டுறவாளர்கள் எனப் பெரும் தொகையானோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் நேற்று முன்தினம் சிலாவத்தை புனித அம்மன் ஆலயத்திலும், காயாமோட்டை விநாயகர் ஆலயத்திலும், சிலாவத்தை தமிழ் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர்.

அத்துடன் வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் தேவிபுரம் தேசிய எழுச்சிப் பேரவையினரின் தலைமையில் பாடசாலை சமூகத்தினரும், பொதுமக்களும் சிரமதானப் பணிகளை நேற்று முன்தினம் செய்துள்ளனர்.

இதேபோன்று விசுவமடு மாவீரர் மண்டபத்தில் நேற்று முன்தினம் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம் கடந்த 22ஆம் திகதி 15 பயனாளிகளுக்கு கடன் வழங்கியுள்ளது. மேற்கு கனிஷ்ட உயர்தர மகாவித்தியாலயத்தில் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன திட்ட இணைப்பாளர் தலைமையில் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியினால் ஒருவருக்கு 5000 ரூபா வீதம் 15 பேருக்கு கடனுதவி வழங்கப்பட்டது. மேலும் பல்வேறு இடங்களில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(15,20, 10,08,12, 32)

## அறிமுறை இறுதிப் பரீட்சை வரும் வியாழக்கிழமை நடைபெறும்

(கிளிநொச்சி)

தேசியக் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவன பூநகரி பிராந்திய நிலையத்தில் நேற்று நடைபெறவிருந்த வீட்டு மின் இணைப்பு கற்கை நெறியின் அறிமுறை இறுதிப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் வரும் வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு கிளி. தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் பூநகரி பிராந்திய நிலையத்தில் நடைபெறும் என வீட்டு மின் இணைப்பு கற்கை நெறி விரிவுரையாளர் அறியத் தந்துள்ளார்.

மேற்படி கற்கை நெறி 6 மாத கால கற்கை நெறி ஆகும். இதன் 2ஆம் கட்ட பயிற்சி பளைப் பகுதியில் நடைபெறும் என்பதுடன் இக்கற்கை நெறியில் பயில விரும்பும் ஆண், பெண் இரு பாலாரும் "பதிவாளர், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, பளை" என்ற முகவரிக்கு வரும் வியாழக் கிழமைக்கு முன்னர் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறியிற்கு உதவுத் தொகை வழங்கப் படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (15)

## அடிப்படை வசதிகளற்று இயங்கும் தபாலகம்



(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி இராமநாதபுரம் சந்திக்கு அண்மையாக உள்ள உபதபாலகம் அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி பலத்த சேதம் அடைந்து காணப்படுகின்றது. இவ் உபதபாலகம் 1956 ஆம் ஆண்டு புதிதாக அமைக்கப்பட்டதற்கு 2004 ஆம் ஆண்டு வரை எந்தவித திருத்த வேலைகளோ செய்து கொடுக்கப்படவில்லை. தற்போது இத் தபாலகம் அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி இயங்கி வருவதைப் படத்தில் காண்க. (12)

### புனரமைப்பு

பூநகரியில் உள்ள முட்கொம்பன்குள குளக்கட்டு துரிசு, வாய்க்கால் என்பனவற்றின் புனரமைப்பு நியாப் திட்டத்தின் கீழ் முப்பத்துநான்குலட்சத்துமுப்பத்தாறாயிரம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (34)

### வேண்டுகோள்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பகுதியில் பிரதான வீதியோரமாக சுற்று மதில்கள், வர்த்தக நிலையங்கள் மற்றும் கட்டடங்கள் கட்டுவோர் பிரதேச சபை ஊடாக வட்டக்கச்சி அரசியல்துறையினரை நாடி தேவைக்கேற்ப ஆலோசனையைப் பெற்று இடத்தைத் தெரிவு செய்யுமாறு வட்டக்கச்சி அரசியல்துறையினர் வேண்டியுள்ளனர். (12)

### வட இலங்கை சங்கீதசபை பரீட்சை

2005 ஆம் ஆண்டிற்கான வடஇலங்கை சங்கீதசபைப் பரீட்சைக்கு தோற்றும் எமது பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தில் வழங்கப்படுவதனால் மாணவர்கள் முன்கூட்டியே விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

### மானிய விலையில் தென்னை நாற்று

பூநகரி விவசாயிகளின் நன்மை கருதி மானிய விலையில் தென்னங்கன்றுகளை வழங்க தென்னை அபிவிருத்திச் சபை தீர்மானித்துள்ளது. இதற்கான பதிவுகளை அந்தந்த கிராம சேவகர் ஊடாக மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இக்கன்றுகள் பூநகரி, முழங்காவில் கமநல சேவை நிலையங்களில் வைத்து மக்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பயன்பெறுமாறு பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (34)

# அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தால் சமூக நலத்திட்டங்கள் முன்னெடுப்பு

(கிளிநொச்சி)

அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தால் ஒக்ஸ்பாம், போரூட் நிறுவனங்களின் நிதி உதவியுடன் அக்கராயன் பிரதேசத்தில் சமூக நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

மணியங்குளம் பகுதியில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட, கூடிய குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட 05 பயனாளிகளிற்கு 05 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. இதற்கான நிதியுதவியினை போரூட் வழங்கியுள்ளதுடன் இதனை அக்கராயன் அபிவிருத்தி நிறுவனம் செயற்படுத்தி வருகின்றது. இவ் வீடுகளின் மொத்தப் பெறுமதி ஒரு இலட்சத்து 90,000 ரூபாவாகும். இதனுடன் போரூட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் கெங்காதரன் குடியிருப்பில் ஒரு பொதுக் கிணறும், 8ஆம் கட்டை 50 வீட்டுத் திட்டத்தில் ஒரு கிணறும், கண்ணகைபுரம் பகுதியில் ஒரு கிணறும் மறு சீரமைக்கப்பட்டுள்ளது.

ஒக்ஸ்பாம் நிதியுதவியுடன் அக்கராயன் 7ஆம் துண்டு பகுதியில் ஒரு இலட்சத்து 23 ஆயிரம் ரூபா பெறுமதியான பொதுக் கிணறும் அமைக்கப்பட்டு வருகின்றது. தலா 10,000 ரூபா படி சிறு வியாபாரம் செய்வதற்காக அக்கராயன், கண்ணகைபுரம் பகுதிகளைச் சேர்ந்த 06 பயனாளிகளிற்கு 60,000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மாடு வளர்ப்பிற்காக அக்கராயனில் 5 பயனாளிகளிற்கும், கண்ணகைபுரத்தில் 5 பயனாளிகளிற்குமாக ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன், கோழி வளர்ப்பிற்காக கண்ணகைபுரத்தில்3 பயனாளிகளிற்கும் 30,000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

ஆடு வளர்ப்பிற்காக அக்கராயனில் 5 பயனாளிகளிற்கும், கண்ணகைபுரத்தில் 5 பயனாளிகளிற்குமாக ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மீள வேய்தல் திட்டத்தில் போரூட் நிறுவன நிதியுதவியுடன் அக்கராயனில் 63 வீடுகளுக்கும், கண்ணகைபுரத்தில் 40 வீடுகளுக்குமாக 103 வீடுகளிற்கு கிடுகுகள் வழங்கப்பட்டுள்ளன. அக்கராயன் பிரதேசத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியுடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனம் சமூக நலத் திட்டங்களைச் செயற்படுத்தி வருவதுடன் தொடர்ந்தும் இத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிய வருகின்றது. (15)

## உலக உணவுத்திட்டவேலைகள் எட்டு பூநகரியில் பூர்த்தி

உலக உணவு நிறுவனத்தின் கீழ் பூநகரியில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் 8 வேலைத்திட்டங்கள் முற்றாகப் பூர்த்தியாகியுள்ளன. வேலைத்திட்டங்களான சொறிக்குளம் புனரமைப்பு, பரமன்கிராய் குளம் புனரமைப்பு, முளங்காவிலில் உள்ள கதிராவில்குளம் புனரமைப்பு, தும்புகுவில் குளம் புனரமைப்பு, பரமன் கிராய் உப்புநீர் அணைக்கட்டுப்புனரமைப்பு, செம்பன்குன்று உப்புநீர் அணைக்கட்டுப் புனரமைப்பு, காவாக்குளம் உப்புநீர் அணைக்கட்டு புனரமைப்பு, தெளிவரைக்குளம் புனரமைப்பு, இதைவிட செம்பன்குளம், வாடியடி சின்னவேலிக் குளம், குமுழமுனை வண்ணாபிட்டிகுளம், முழங்காவில் குளம், கறுக்காய்த்தீவு வட்டத்தாழ்வுக்குளம் என்பவற்றின் புனரமைப்பும்,கௌதாரிமுனை, ஞானிமடம் செட்டியாகுறிச்சி, குமுழமுனை என்பவற்றின் உப்புநீர் அணைக்கட்டும் வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இவ்வேலைத்திட்டங்கள் யாவும் விரைவில் பூர்த்தியாக்கப்படவுள்ளன என கமநலசேவை உத்தியோகத்தர் சுந்தரமூர்த்தி தெரிவித்தார். (34)

# கப்டன் சுருதியின் ஞாபகார்த்தமாக மாலைநேர கல்விக்கூடம் அமைப்பு



(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி 10 வீட்டுத் திட்டத்தில் மாவீரர் கப்டன் சுருதி ஞாபகார்த்தமாக மாலைநேர கல்விக் கூடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. மூன்று லட்சம் ரூபாய் செலவில் ஊரக வளர்ச்சித் திட்டத்தால் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்திறப்பு விழாவானது நேற்றுக் காலை 10.00 மணியளவில் 10 வீட்டுத் திட்டத் தலைவர் ஆ. தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்றது.

பொதுச் சுடரினை கிளி/ கிழக்கு புனர்வாழ்வுக்கழக மேற்பார்வையாளர் கிருஷ்ணா அவர்கள் ஏற்றிவைக்க, தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் அவர்கள் ஏற்றிவைத்தார். கட்டடத்தினை போராளி, மாவீரர் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன் அவர்கள் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மாவீரர் கப்டன் சுருதியின் தந்தையாரும் தாயாருமான நடராசா-ஈஸ்வரி ஆகியோர் விளக்கினை ஏற்றி மலர் மாலையினை அணிவித்தனர்.

இந்நிகழ்வில் தியாகி திலீபன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு போராளி குகன் அவர்கள் மலர் மாலை அணிவித்து விளக்கினை ஏற்றி வைத்தார்.

இந்நிகழ்வில் சிறப்புரையினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் அவர்கள் நிகழ்த்தினார். நன்றி உரையினை மாலைநேர வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர் மேனகா அவர்கள் நிகழ்த்தினார். (12)

# எழுந்து வந்து நின் எழில் முகம் காட்டாயோ...?

தங்கத் தமிழ் மணக்கும் எங்கள்
தமிழீழ மண்ணதிலே
சிங்கக் கொடி பறந்து எம்மை
சிதைத்திட நாம் விடவோ...?-என
பொங்கி எழுந்து- புலியாகி மண்ணில்
சங்கமமாகிய மாவீரர்களுள் நீ
சரித்திர நாயகன்

திட்டமிட்ட சதியினால் எம்மை
வெட்டி வீழ்த்த வந்த
அட்டகாசப் பேய்களின்
கொட்டம் அடக்கிட நீ
அகிம்சை வழிப் போர் தொடுத்து மண்ணில்
ஆகுதியாய்ப் போன அண்ணன் திலீபனே!

மாயவித்தை போட்டு வந்து எமை
மண்டியிட வைக்கவென்று நல்ல
நாடகம் ஆடி வந்த
பாரதப் படைகளுக்கு-தக்க
பாடம் புகட்டவென்று-நீ
தாகமுடன் இருந்தாயோ....?

தோகை விரி மயில் கொண்ட
வேலனவன் முன்றலில் உன்
யாகப் போர் கண்டு அந்த
காந்தி மகான் தேசமே
கதிகலங்கி நின்றதண்ணா.



குண்டு பட்ட குடல் கருக- நீ
கொண்ட கொள்கை மாறவில்லை-அதை
கண்டு மக்கள் கதறி நிற்க-யாரும்
வந்து நீதி தந்திருந்தால்-நீ
இந்த மண்ணில் என்றும்
எம்முடனே வாழ்ந்திருப்பாய்

சோர்வடைந்த உடலும் உன்
சோராத உறுதியும் கண்டு
பாரெல்லாம் எம் மண் மீது-தன்
பார்வையைத் திருப்பியது-ஆனால்
நீதி தந்து உன் போரை
நிறுத்த யாரும் வந்தனரோ...?

விடை தந்த தலைவன்
விழி கலங்கி நிற்க-உனை
பெற்றெடுத்த ஈழமண்ணும் உன்
சுற்றமாய் சூழ நின்ற
நற்றமிழ் மக்களும்
ஓங்கி அழுதிட உன்
உயிர் பிரிந்து போனதுவோ?

அண்ணா!
பார்க்கத் துடிக்கும் உன்
பாச மக்களுக்கு - ஒருமுறை
எழுந்து வந்து உன்
எழில் முகம் காட்டாயோ...?

செல்வி. க.கலையரசி

## யாழ்.இல் வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பளிக்க வணிகர் கழகம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வேலை வாய்ப்புக்கள் அற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டு தொழில் வழங்கல் நிலையம் என்ற அமைப்பொன்றை யாழ். வணிகர்கழகம் ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 18 வயதிற்கு மேற்பட்ட சகலவிதமான கல்வித் தகைமையுடையவர்களுக்கும் அவரவர் தகுதிக்கு ஏற்ற தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுப்பதை இலக்காகக் கொண்டே இவ் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

தனியார் துறைகளில் உள்ள எழுதுவினைஞர்கள், கணினி இயக்குனர்கள், விநியோகஸ்தர்கள், முகாமையாளர்கள், அலுவலக உதவியாளர்கள், கூலியாட்கள், சாரதிகள் என 9 வகையான தொழில் தரப்படுத்தல்களில் இவ்வாறான தொழில் வாய்ப்புக்கள் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் தொழில் வாய்ப்புப் பெறவிரும்புவோர் கடந்த 20ஆம் திகதி முதல் தத்தமது தொழில் வாய்ப்பு கோரும் விண்ணப்பங்களை யாழ். வணிகர் கழகத்தில் சமர்ப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தொழில் வழங்குனர்கள் தமக்குத் தேவையான பணியாள் வேண்டுகைகளை யாழ். வணிகர் கழகத்துடன் எதிர்வரும் 01ஆம் திகதி முதல் தொடர்பு கொண்டு விரும்பும் தகைமையுடைவர்களை பணிக்கு அமர்த்தி கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## அரியாலை திறந்தவெளி அரங்கை புனரமைக்க நிகொட் உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரியாலை மத்தியில் உள்ள திறந்தவெளி அரங்கினைப் புனரமைப்புச் செய்யவதற்கென நிகொட் அமைப்பு 7 இலட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

நிகொட்டின் கிராம அபிவிருத்தி மற்றும் சமூக மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் இந்நிதி வழங்கப்பட்டிருக்கிறது. இந்நிதி யாழ்.மாநகர சபையின் மேற்பார்வையின் கீழ் செலவிடப்படவுள்ளது.

இதேவேளை கடந்த கால யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்து கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் மேற்படி திறந்த வெளியரங்கைப் புனரமைப்புச் செய்து மக்கள் பாவனைக்கு விடுமாறு அப்பகுதி மக்கள் கோரி வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (33)

## சட்டவிரோத கசிப்பு விற்பனையை உடன் தடை செய்யக் கோரல்

(தென்மராட்சி)

எழுதுமட்டுவாள் படித்த மகளிர் குடியேற்றத்திட்டத்துக்கு அருகில் அன்னம்மாள் கோயிலுக்கு அருகே உள்ள ஒரு வீட்டில் நீண்டகாலமாகவே கசிப்பு காய்ச்சி விற்கப்படுவதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் இப்பகுதியின் தனித்தன்மையும், கௌரவமும் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிறிலங்காப் பொலிசார் சாராயம் காய்ச்சி விற்கும் இந்த நபரை பலமுறை பிடித்தும் தொடர்ந்தும் இந்த நபர் இத்தொழிலை மேற்கொண்டு வருவதாக தெரியவருகின்றது. (28)

## ஊடகவியலாளருக்கு இருபத்துநான்கு மணிநேர பரிசோதனை முறையிலான இன்ரர் நெற் வசதி

*–ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் ஏற்பாடு*

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் சர்வதேச செயற்கைக்கோள் ஒன்றின் உதவியுடன் 24 மணிநேர இன்ரர் நெற் வசதி பரிசோதனை முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொடக்கமாக 2 கணினிகளில் இந்த வசதி செய்து தரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துப் பத்திரிகையாளர்கள் எவரும் இந்த வசதியைத் தமது அலுவல் நோக்கிற்காக பயன்படுத்திக் கொள்ள முடியும். இவ்வசதியைப் படிப்படியாக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் உள்ள அனைத்து கணினிகளுக்கும் விரிவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வசதிகளைப் பயன்படுத்த விரும்பும் பத்திரிகையாளர்கள் இதற்கென உரிய விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து பல்கலைக்கழக ஒப்புதலுடன் உரிய அடையாள அட்டை பெற்றுக கொள்ள வேண்டும். அவ்வாறு அடையாள அட்டை பெற்றுக் கொள்ளும் பத்திரிகையாளர்கள் மட்டுமே இவ்வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். இது தொடர்பாக மேலதிக விபரங்களை மைய இணைப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸிடமோ அல்லது பயிற்சி இணைப்பாளர் செ.அருட்செல்வனிடமோ தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என இணைப்பாளர் அறியத்தந்துள்ளார்.

## பொது மண்டபங்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்டுப் பின்தங்கிப் போயுள்ள பிரதேசங்களின் மேம்பாட்டினை கவனத்தில் கொண்டு அப்பகுதியில் பொது மண்டபங்களை அமைப்பதற்கென நியாப் திட்டத்தினூடாக 50 இலட்சம் ரூபா நிதியை வழங்கியிருந்தது.

இந்நிதியிலிருந்து வடமராட்சி கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள மணற்காடு குடத்தனை அம்மன், பொற்பதி ஆகிய கிராமங்களுக்கு பொது மண்டபங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டது. (33)

## ஐயாயிரம் தாதியஉத்தியோகத்தரை சேர்த்துக்கொள்ள அரசு முடிவு

*– சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா*

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட தாதிய உத்தியோகத்தர்கள் புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட விருப்பதாக சிறிலங்காவின் சுகாதார அமைச்சர் நிமல்சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் ஐயாயிரம் பேர் தாதியர்களாக சேர்த்துக்கொள்ளப் படுவார்கள் என்றும் மேலும் 500பேர் துணை மருத்துவ சேவையில் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள் என்றும் கூறியுள்ளதுடன் தாதியர்கள்ஐயாயிரம் பேரிலும் இரண்டாயிரம் பேருக்கு உடனடியாக பயிற்சி வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் துணை மருத்துவ சேவையில் சேர்த்துக்கொள்ளப் படவிருக்கும் 500பேருக்கும் ஒக்ரோபர் மாதம் நான்காம் திகதியிலிருந்து பயிற்சி ஆரம்பிக்கும் என்றும் இப்பயிற்சித் திட்டத்திற்கான நிதியை ஏற்கனவே திறைசேரி அனுமதித்திருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தாக “ஐலண்ட்” ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

## யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கான நிர்மாணப்பணிகள் விரைவில் ஆரம்பம்

(வடமராட்சி)

யாழ்.தொழில் நுட்பக்கல்லூரிக்கான புதிய கட்டடத் தொகுதிகளை நிர்மாணிக்கவென் 73 மில்லியன் ரூபாவினை அரசு ஒதுக்கி வழங்க முன்வந்துள்ளது.

பத்து கட்டடத் தொகுதிகளைக் கொண்டதாக நிறுவப்படவுள்ள இக்கட்டடங்களிற்கான நிதியினை திறன் அபிவிருத்தி வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில் நுட்பக் கல்வி அமைச்சு வழங்கவுள்ளதாக தெரியவருகின்றது.

தன்னியக்க இயந்திரவியல், பொறியியல், மின்னியலும், இயந்திரவியலும் மற்றும் குடிசார் பொறியியல் ஆகிய நான்கு பீடங்களே இக்கட்டடத்தொகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதேவேளை கொரிய அரசினால் வழங்கப்படும் நிதி மூலம் மேற்கொள்ளப்படவுள்ள வேலைகள் தொடர்பினில் முன்னர் நிலவிய இழுபறிகளால் ஒதுக்கபட்ட நிதியினை தென்னிலங்கை தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கு மாற்றிவிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும் எனினும் தனது முயற்சியால் அந்நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டு விட்டதாகவும் அதிபர் என் யோகராசா ஊடகவியலாளர்களிடையே தெரிவித்தார். (27)

## பொலிஸ் உத்தியோகத்தருக்கு ஏழு வருட கடூழியச் சிறை

வெலிக்கடை பொலிசைச் சேர்ந்த நந்தசேன என்பவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் 07 வருட கடூழியச் சிறைத்தண்டனையை விதித்துள்ளது. இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவருகையில்: கடந்த மாதம் இவர் கைது செய்த ஆறுமுகம் - கணபதிராஜ் என்பவருக்கு வழக்குத் தொடராமல் இருப்பதற்காக இவர் கணபதிராஜிடமிருந்து 10ஆயிரம் ரூபா இலஞ்சமாக வாங்கினார் என இவர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இக் குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் இவருக்கு 07 வருட கடூழியச்சிறைத் தண்டனையையும், 15 ஆயிரம் ரூபா அபராதத்தையும் விதித்துள்ளார். (32)

# பூமியில் உயிர்கள் தோன்றியதில் விண்கற்களின் பங்களிப்பு

பூமியில் உயிர்கள் தோன்றியதில் விண்கற்களின் பங்களிப்பு உள்ளதாக அமெரிக்க விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

உயிர்களின் தோற்றத்திற்குத் தேவையான கனிமங்களில் ஒன்றான பொஸ் பரஸை அவை வழங்கியதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

'பூமியில் உயிர்கள் தோன்றுவதற்குத் தேவையான பொஸ்பரஸ் எங்கிருந்து கிடைத்தது என்பது இதுவரை மர்மமாகவே இருந்து வந்தது' என்கிறார் இது குறித்து ஆய்வு மேற்கொண்டு வரும் அமெரிக்காவின் அரிசோனா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாத்யூ பாசெக்.

அமெரிக்காவின் நாசா விண்வெளி நிறுவன நிதியுதவியுடன் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. முக்கிய மூலக்கூறுகளான டீ.ஆக்சி ரிபோ நியூக்ளிக் ஆசிட் (டிஎன்ஏ) ரிபோ நியூக்ளிக் ஆசிட் (ஆர்என்ஏ) ஆகியவற்றிற்கு ஆதாரமாக விளங்குவது பொஸ்பரஸ். ஆற்றலை உற்பத்தி செய்யும் மூலக்கூறுகளின் அங்கமாக விளங்கும் பொஸ்பரஸ் செல்சவ்வுகளிலும், எலும்புகளிலும் காணப்படுகிறது. கார்பன், ஐதரசன, ஒட்சிசன், நைதரசன் ஆகியவற்றையடுத்து ஐந்தாவது மிக முக்கிய கனிமம் பொஸ்பரஸ் ஆனால் மற்ற 4 கனிமங்களை விடவும் இது இயற்கையில் மிக அரிதாகவே கிடைக்கும். விண்கற்களில் பொஸ்பரஸை உள்ளடக்கிய பல்வேறு கனிமங்கள் உள்ளன. 'ஸ்கிரெய்பர் சைட்' என்று அழைக்கப்படும் விண்கல்லில் உள்ள அப்படி ஒரு இரும்பு-நிக்கல் கனிமத்தை அரிசோனா பல்கலை விஞ்ஞானிகள் ஆராய்ந்தனர்.

விண்கற்களில் குறிப்பாக இரும்பு விண்கற்களில் இக்கனிமம் நிறைந்திருக்கிறது. ஆனால் பூமியில் அரிதாகவே கிடைக்கிறது.

இந்த ஸ்கிரெய்பர்சைட் கனிமத்தை ஆய்வுக்கூடத்தில் இயல்பான அறை வெப்பநிலையில் அயனி நீக்கப்பட்ட தண்ணீரில் கலந்து ஆய்வு செய்தனர்.

"அதில் பல்வேறு பொஸ்பரஸ் கூட்டுப்பொருட்கள் உருவாவதைக் கண்டோம். இல் 2 இர்7 உருவானது தான் மிகவும் வியப்புக்குரியது" என்று கூறுகிறார் பாசெக.

'இதற்கு முன்பு நடத்திய பல பரிசோதனைகளின் போதும் இல் 2 இர் 7 உருவாகியிருக்கிறது. ஆனால் மிக உயர்ந்த வெப்பநிலையில் கடினமான நிலையில் தான் அதை உருவாக்க முடிந்தது. ஆனால் இப்போது இயல்பான அறை வெப்பநிலையிலேயே கனிமத்தை தண்ணீரில் கரைத்தவுடனேயே உருவானது குறிப்பிடத்தக்கது' என்கிறார் பாசெக். பூமியில் நீர் நிலையை ஒட்டி விண்கல் விழுந்த பகுதியில் பொஸ்பேற்றை அடிப்படையாகக் கொண்ட உயிர் தோன்றியிருக்கக் கூடும் என்பதையே இது காட்டுகிறது என்று அவர் கூறுகிறார்.

# அளவுக்கு மீறிய சத்தம் நுரையீரலைப் பாதிக்கும்

அளவுக்கு மீறிய சத்தம் காதுகளுக்கு சேதம் ஏற்படுத்தும் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் நுரையீரலிலும் பெரிய சேதத்தை உண்டுபண்ணுவதாக தற்போது தெரியவந்துள்ளது. PNEUMO THORAX என்பது நுரையீரலில் ஏற்படும் நோய். இது 2 நுரையீரல்களில் ஏதாவது ஒன்றின் சுவரில் வெடிப்பை உண்டாக்குகிறது. ஆனால் நுரையீரலுக்கும், இதயச் சுவருக்கும் உள்ள இடைவெளியில் காற்றுக்கசிவு ஏற்படுகிறது. இதனால் நுரையீரல் படிப்படியாக சிதையத்தொடங்கும். நுரையீரலுக்கும், இதயச்சுவருக்கும் இடையில் காற்றுப் புகுவதால் நெஞ்சு வலி, சுவாசம் தடைப்படுதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும்.

சின்னவெடிப்புத் தானாகவே சரியாகி விடும். ஆனால் அதுவே பெரிதாக இருந்தால் சிக்கலில் கொண்டு விட்டுவிடும். இப்படிப்பட்ட நிலையில் காற்றை வெளியேற்றுவதற்காக சிறப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இல்லையென்றால் உயிருக்கு ஆபத்து ஏற்படும்.

உயிருக்கு உலை வைக்கும் இத்தகைய நுரையீரல் சுவர் வெடிப்புக்குச் சத்தமும் ஒரு காரணம். காதைப் பிளக்கும் சத்தத்தை வைத்துக்கொண்டு கன்னாபின்னா என்று நடனம் ஆடும் பழக்கம் இக்காலத்து இளைஞர்கள், யுவதிகளுக்கிடையே அதிகரித்து வருகிறது. இத்தகைய இளைஞர்கள் இனிமேல் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. புகைப்பிடிப்பவர்கள் எப்படிப் பாதிக்கப்படுகிறார்களோ அதேபோல அதிக சத்தத்தைக் கேட்கும் மற்றவர்களும் பாதிக்கப்படுவார்கள்.

# நோபல் பரிசு பிறந்த கதை

சுவீடன் நாட்டைச் சேர்ந்த அல்பட் நோபல் (Albert Nobel) எனும் ஆய்வாளர் 1980 காலப்பகுதியில் நைட்ரோ கிளிசரின் (Nitro Clecerene) எனும் புதுவகை வெடிமருந்தை கண்டுபிடித்தபோது உலகமே அவரைக் கொஞ்சம் வியப்போடு தான் பார்த்தது.

இவ் வெடி மருந்து ஆரம்ப காலத்தில் நல்ல பல நோக்கங்களிற்காக பயன்பட்டதையடுத்து பெருமகிழ்ச்சிகொண்ட நோபல் அவ்வெடி மருந்தின் இறை மூலம் ஏகப்பட்ட சொத்துக்களையும் தேடிக கொண்டார்.

காலம் செல்லச் செல்ல இவ் வெடி மருந்தை மனிதன் அழிவுப் பாதையில் பயன்படுத்தியபோது மனம், உடைந்துபோனார். நோபல். மக்கள் மத்தியில் அவருக்கிருந்த வரவேற்பும், மதிப்பும் குறைந்தது, அவரைத் தூற்றத் தொடங்கினார்கள்.நோபல் சிந்தித்தார்... இதற்குப் பரிகாரம் என்ன...?


தனக்கோ வாரிசுகள் இல்லை. இவ்வளவு சொத்துக்களையும் யார் அனுபவிக்கப்போகிறார்கள். எதற்காவது நல்ல நோக்கத்திற்காகப் பயன்படட்டுமே என்ற தீர்மானத்திற்கு வந்தார்.

தனது சொத்துக்கள் அனைத்தையும் வர்த்தக வங்கியொன்றில் நிலையான வைப்பிலிட்டார்.

அத்துடன் நிலையான வைப்பிலிருந்து வரும் வட்டியிலிருந்து உலகளாவிய ரீதியில் பௌதீகம், இரசாயனம், மருத்துவம், இலக்கியம், பொருளாதாரம், உலக சமாதானம் போன்ற துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு ஆண்டு தோறும் பரிசுகள் வழங்கி கௌரவிக்குமாறு உயில் எழுதி விட்டு, அடுத்த ஆண்டே அதாவது 1896ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் திகதி நோபல் மரணித்துப் போனார். இவரது மறைவையடுத்து 1901 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதியும் நோபல் பரிசு வழங்கும் பணி நடை பெற்று வருகின்றது.

# புகைத்தலைக் கட்டுப்படுத்த மாற்றீடாக இனிப்புத் தயாரிப்பு

புகைத்தலினால் பயங்கர தீமைகள் விளைவதாக தொடர்ந்தும் எச்சரிக்கை விடுக்கப்பட்டு



வரும் நிலையில் அதனைத் தடுப்பதற்கு பல்வேறு மாற்றுவழிகளும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்காக சில இனிப்பு வகைகள் சந்தைக்கு விடப்பட்டுள்ளன.

அவற்றுள் பெரி, லெமன், தோடை ஆகியவற்றின் சுவையைக் கொண்ட சுவிங்கம் ஒன்றாகும். சுவிங்கம் பாவனை சூழல் பாதுகாப்பிற்கு பிரச்சினையேற்படுவதால் பல நாடுகள் சுவிங்கம் பாவனைக்குத் தடைவித்தது. அல்லது கட்டுப்படுத்தியது.

எனினும் இறுதியாக புகைத்தலுக்கும் சுவிங்கம் பாவனைக்கும் சிலர் அடிமையாகினர். இப்புகைப் பிடித்தலினால் மனித வாழ்க்கை கவலைக்குள்ளானதில் அதற்குப் புதிய தீர்வு ஒன்றாக "லொலிபொப்" இனிப்பு வகை தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

புகைத்தலுக்கு அடிமையாவதைத் தடுக்கக் கூடிய இவ்வகை இனிப்புகள் சில நோய்களையும் கட்டுப்படுத்தும் என தயாரிப்பு நிறுவனம் தெரிவிக்கின்றது. அமெரிக்க உணவு மற்றும் மருந்துப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரின் (FDA) அனுமதியுடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இவ் இனிப்புப் பொருள் நிகோஸ்டொப் (NICOSTOP) லிகாடையின் (LIKATINE) எனப் பெயர் பெறுகின்றன.

இப்புதிய நடவடிக்கை உலகின் புகைத்தலை இல்லாமல் செய்யும் என நம்பப்படுகிறது. நிகோட்டின் அடங்கிய இவ் லொலிப்பொப் புளிப்புச் சுவையைக் கொண்ட 2 முதல் 4 மில்லிக்கிராம் நிறையுடையது. இது சலிசிலேட் (SALICYLATE) எனப்படும் அமிலத்தைக் கொண்டது. இதன் விலை 3 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

இவ் இனிப்புப் பொருள் சாதாரணமாக எல்லாக் கடைகளுக்கும் விநியோகம் செய்யப்படாது. குறிப்பிட்ட மருந்துப்பொருள் விற்பனைக் கடைகளுக்கு (DISPENSORY) மட்டுமே தயாரிப்பு நிறுவனம் அனுமதி வழங்குகிறது.

இவ் வகை இனிப்பு ஒரு சில நிமிடங்களுக்கு வாயில் வைத்திருந்து பிறகு அதற்கெனத் தயாரிக்கப்பட்ட உறையில் வைத்து மீண்டும் பாவிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் நாள் ஒன்றுக்குத் தேவைப்படும் சுமார் 5 சிகரெட்டின் தேவை இல்லாமல் போய்விடும்.

சுவிங்கம் புகைத்தலைக் கட்டுப்படுத்தாவிடினும் இந்த லொலிபொப் அதனை நிறைவேற்றுகிறது. அதன் செயற்பாடு சுவிங்கத்தை விட அதிகமானது.

எவ்வாறாயினும் இதன் அபரிமிதப்பாவனை இதய நோய், நுரையீரல் புற்றுநோய் என்பவற்றை ஏற்படுத்தலாம். சிறுவர்களுக்கு இது தடைசெய்யப்பட்ட பொருளாகும்.

அமெரிக்க FDA நிறுவனம் இவ்வகையான தயாரிப்புகள் பலவற்றை அறிமுகப்படுத்தியிருப்பினும் சிலவற்றுக்குச் சந்தைப்படுத்தும் அனுமதியை வழங்கவில்லை. இவற்றில் ஒன்று (NICORETTE) நிகோரட்டி எனப்படும் இனிப்பாகும் லொலிபொப் வயது, பாவனை அளவு என்பவற்றைக் கொண்டதன்று. இதன்படி இது தொடர்பான விவாதத்தின் முடிவில் இவ்வகை இனிப்பு வகை உற்பத்தியில் மேலும் FDA கவனம் செலுத்த வேண்டும் என பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# குறைவாகத் தூங்கினால் மனநலம் பாதிக்கும்

6 மணி நேரத்துக்குக் குறைவாகத் தூங்குபவர்களின் மனநலம் பாதிக்கப்படுகின்றது என அமெரிக்க டாக்டர்கள் வான் டாங்கென் தலைமையிலான குழுவினர் ஆய்வு செய்துள்ளனர்.

மனிதர்களுக்கு இரவில் நல்ல தூக்கம் வேண்டும். அதனால்தான் சிகிச்சைக்கு செல்லும் நோயாளிகளிடம் டாக்டர்கள் நல்லாத் தூக்கம் வருகிறதா? எனக் கேட்கிறார்கள். தூக்கம் பற்றி அமெரிக்க டாக்டர்கள் வான் டாங்கென் தலைமையிலான குழுவினர் ஆய்வு நடத்தினர்.48 பேர் ஆய்வுக்குத் தெரிந்து எடுத்து கொள்ளப்பட்டனர். அவர்கள் 4குழுவாக பிரித்து ஆராயப்பட்டனர். இரவில் 4 மணி நேரம், 6 மணி நேரம், 8மணி நேரம் எனத் தூங்க வைக்கப்பட்டனர். அவர்களிடம் மருத்துவப் பரிசோதனைகள் செய்து பார்க்கப்பட்டது. 6 மணி நேரத்திற்கு குறைவாகத் தூங்குபவர்கள் கேள்விக்குத் தாமதமாக பதில் அளித்தனர். அவர்கள் மனநலம் (மனநிலை) பாதிக்கப்பட்டு இருப்பதும் தெரியவந்தது.

# பெயர் கூறும் தொலைபேசி

அமெரிக்க நிறுவனம் பேசும் தொலை பேசியைக் கண்டு பிடித்துள்ளது. தொலை பேசியில் அழைப்பவரின் எண்ணை மட்டும் தெரிவிக்காமல் அந்த எண்ணுக்குரியவரின் பெயரையும் இந்தத் தொலைபேசி கூறும் தன்மையுடையதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொலைபேசியில் முதலில் அழைப்பு ஏற்படுத்துபவரின் எண்கள் தொலைபேசித்திரையில் தெரியும். அதன்பின்னர் தொலைபேசித்தொடர்பிலுள்ள கணினியுடன் தொடர்பு கொண்டு அங்குள்ள தகவல்களை ஆராய்ந்து அந்த எண்களைக் கொண்டு அத் தொலைபேசி யார் பெயரில்பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதைக் கண்டுபிடித்து விடும். பின்னர் அந்தக் கருவியிலுள்ள பேசும் சாதனம் இயங்கி அழைத்த தொலைபேசி எண்ணுக்கு உரியவரின் பெயரை உச்சரிக்கும்.

அதேபோல் அத் தொலைபேசிக்கருவியிலிருந்து வேறு ஒருவருக்கு தொலை பேசி அழைப்பு எடுத்தால் அந்த எண்ணுக்குரியவர் யார் என்பதையும் இத்தொலைபேசி தெரிவித்துவிடும்.

இதனை அமெரிக்காவின் அடெட் தொலை பேசி நிறுவனம் தயாரித்துள்ளது.

## உணவுக்கட்டுப்பாட்டால் இளமையாக வாழமுடியுமா?

உணவுக்கட்டுபாட்டால் இளமையாக வாழமுடியும் என அமெரிக்க பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். உணவுக் கட்டுப்பாட்டை வாழ்நாளில் பின்பற்றினால் இளமையாக வாழ முடியுமென அவர்கள் கண்டுபிடித்து இருக்கிறார்கள்.குறிப்பாக குறைவான கலோரி உணவு வகைகளை உட்கொள்ள வேண்டும். அவ்வகை உணவுகள்தான் இதயத்திற்கு இதமளிக்கின்றது.

# அமெரிக்கா பற்றி...

உலகிலேயே அதிக எண்ணிக்கையாக Ph.D படித்தவர்கள் அமெரிக்காவின் ஹன்ஸ்வில் (அல்பாமா) எனும் ஊரில் தான் வேலை செய்கின்றார்கள். உலகப் புகழ் பெற்ற NASA வும் இங்கு தான் உள்ளது.

கார் விபத்தைத் தடுப்பதற்காக அமெரிக்கக் கார்களில் காற்றுப்பை முறையை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். கார்கள் எதிருக்கெதிரே வேகத்தில மோதிக்கொள்ளும் போது ஸ்டியரிங்கிலிருந்து ஓர் அமைப்பு பலூன் போல் பெரிதாகி மார்பில் உடலில் காயங்கள் ஏற்படாமல் தவிர்த்து விடுகின்றது. இந்த பலூன் ஊதல் உரிய நேரத்தில் நடந்து விடுகின்றது என்பதுதான் விஷேடம். அமெரிக்காவில் உள்ள ஹன்ஸ்வில் நகரில் மக்கள் தொகை சுமார் 3,00,000 பேர். இவர்களுள் சுமார் 250,000பேர்வரை செல்வந்தர்கள். 5,000,00 மதிப்புள்ள கார் ஒன்றை முதலில் ஒரு ரூபா கூட செலுத்தாமல வீட்டிற்கு எடுத்துவர முடியும். இதற்கு Credit history தான் காரணம். அமெரிக்காவிலுள்ள எந்தவொரு நபருக்கும்ஓர் எண்ணை அரசாங்கம் ஏற்கனவே வழங்கி இருக்கும். அவ்வெண்ணை கம்யூட்டரில் கொடுத்தால் அவரது சரித்திரமே கிடைத்துவிடும். இவ்வெண்ணுக்கு சமூகப்பாதுகாப்பு இலக்கம் என்று பெயர்.

அமெரிக்காவில் சோசியல் செக்யூரிட்டி நம்பர், கார்லைசென்ஸ், கிரடிட்காட் ஆகிய மூன்றும் இல்லையெனில் எந்த இடத்திலும் எந்த வேலையும் உடனே நடக்காது.

# "இலங்கையின் ஆசிரியர் கல்வியின் (பயிற்சியின்) அண்மைக்காலப் போக்குகள்"

இலங்கையின் கல்விமுறை நீண்ட கால வரலாற்றை உடையதாகும். புராதன காலம்தொடக்கம் கல்விக்கான நடைமுறை ஏற்பாடுகள் இடம்பெற்று வந்தமையை புத்தஜாதகக் கதைகள் மூலம், வேத இலக்கியம் மூலமும் அறியமுடிகிறது. பிற்பட்ட காலங்களான அந்நியர் ஆட்சிக் காலங்களிலும் கல்விக்கான நடைமுறை இடம்பெற்று வந்துள்ளது. ஆரம்பகாலத்தில் பெளத்த மடாலயங்களும் அந்நியர் ஆட்சிக்காலத்தில் செமினரிகளும் ஆசிரிய பயிற்சிக்களங்களாகக் குறிப்பிடக்கூடிய இடங்களாகும். இங்கு சமயத்தை அடிப்படையாகக்கொண்டே ஆசிரிய பயிற்சிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் பின்னர் 1945களின் பின் ஏற்பட்ட சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா குழுவின் சிபார்சின் போது, கல்விச் சீர்திருத்தத் தின் திறவுகோலாக அமைவது ஆசிரியருக்குச் சரியான பயிற்சி வழங்குவதே என்பதற்கிணங்க பல்கலைக் கழகங்கள் ஆசிரியர் பயிற்சிக்கு சிபார்சு செய்யப்பட்டன. இதன் பின் 1972சீர்திருத்தம், 1980 சீர்திருத்தம், 1998 சீர்திருத்தம் எனக் கல்விச் சீர்திருத்தங்களால் ஆசிரியர் கல்வி பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள் காலத் தேவையின் பொருட்டு மீள வடிவமைப்புப் பெற்றுச் செல்வதனை அவதானிக்கலாம்.

இந்த வகையில் நாம் இலங்கையில் இன்றைய ஆசிரிய கல்வி நிலைமைகளைப் பார்ப்போம். இதன் மூலம் உலகளாவிய ரீதியான புதியபோக்கின் தாக் கத்தைப்பற்றி கலந்துரையாடுவோம்.

இலங்கையின் இன்றைய ஆசிரியர் கல்வியானது பின்வரும் அம்சங்களைக் கொண்டுள்ளது.

1. சேவையிலிருக்கும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை பெறுவதற்காக வழங்கப்படும் ஆரம்பப்பயிற்சி. (முழுநேரத் தொலைக்கல்வி)

2. சேவையில் இருக்கும் பட்டதாரி அல்லாத ஆசிரியர்களுக்கு பயிற்சி பெற்ற ஆசிரியர் தராதரப்பத்திரத்தைப் பெறுவதற்காக வழங்கப்படும் ஆரம்பப்பயிற்சி. (முழுநேர தங்கிப்படித்தல்)

3. கல்விச்சேவையில் இன்னமும் ஈடுபடாத பட்டதாரி அல்லாதோருக்கு கல்வியில் தேசிய டிப்ளோமா பெறுவதற்காக வழங்கப்படும் ஆரம்பப்பயிற்சி. (முழுநேர தங்கிப்படித்தல்)

4. பட்டதாரி அல்லாத ஆசிரியர்களுக்கும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும் தொழில்வாண்மை விருத்திக்காக நடாத்தப்படும் கல்விமாணிப்பட்டம். (V.E.D) (முழுநேரத் தொலைக்கல்வி)

5. சேவையில் இருப்போர்க்கு வழங்கப்படும் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டம். (இது பொதுவாக சேவைக்காலப் பயிற்சி என அழைக்கப்படும்)

மேற்காட்டப்பட்ட இந்நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தும் பிரதான முகாமை நிலையங்களாக

1. கல்வியியற்கல்லூரிகள் (N.C.O.E)
2. தேசிய கல்விநிறுவகம் (N.I.E)
3. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்
4. பல்கலைக்கழகங்கள் என்பன வழங்குகின்றன.

இந்த வகையில் நாம் உலகளாவிய போக்கின் முக்கிய அம்சம் யாதெனில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களுக்கான தேவை அதிகரித்துக்காணப்படுதல் என்ற விடயத்தை உதாரணமாக எடுத்துப்பார்த்தால் இலங்கையின் தற்போதைய நிலையிலே எல்லா ஆசிரியர்களும் பயிற்சி பெற்றுக்கொண்டவர்களாகக் காணப்படவில்லை. அதனால் தான் ஆசிரியர் கல்லூரிகள் ஸ்தாபிக்கப்பட்டு ஆசிரிய முன்சேவைப்பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனலாம்.உதாரணமாக இந்தியாவிலே எல்லா ஆசிரிய நியமனங்களும் பயிற்சி பெற்றவர்களுக்கே வழங்கப்படுகின்றன. இடைநிலை ஆசிரியர் கல்லூரி அனுமதிக்கு இந்தியாவில் புல்கலைக்கழகப் பட்டம் அவசியமானதாகவுள்ளது.

இலங்கையில் மிகக்குறைந்த மட்ட (G.C.E (A/L) பெறுபேறு அடிப்படையாகக்கொள்ளப்படுகிறது. எனினும் தற்போது உலகளாவிய புதிய போக்குகளின் தாக்கம் உணரப்பட்டு இலங்கை ஆசிரியர் நியமனங்கள் பயிற்சி பெற்றவர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் என்ற கொள்கை வலுப்பெற்று ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தினை மீள வடிவமைப்பதில் தாக்கத்தினைச் செலுத்தி வருவதனை அவதானிக்கலாம். பயிற்றப்படாத சகல ஆசிரியர்களும். பயிற்சியை முடித்துக்கொள்வதற்கான ஏற்பாடுகளை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும், தொலைக்கல்வி படநெறியை மேற்கொள்ளும் தேசிய கல்வி நிறுவகமும் (N.I.E) துரிதமாகச் செயற்பட்டு வருகின்றன. பின்வரும் அட்டவணையின்படி ஆசிரியர் பயிற்சித் தேவையினை இனங்கண்டுகொள்ளலாம்.

தகைமைகளின் அடிப்படையில் ஆசிரியர்களின் வகைப்பாடு-1997

| கல்வி தொழில்சார் தகைமைகள் | தொகை | வீதம் |
|---|---|---|
| பட்டதாரிகள்/பயிற்றப்பட்டபட்டதாரிகள் | 44,169 | 28.0 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் | 79,853 | 50.6 |
| தராதரப்பத்திரமுள்ள ஆசிரியர்கள் | 3,820 | 02.4 |
| தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்கள் | 20,239 | 12.8 |
| ஆசிரிய பயிலுனர்கள் | 9,740 | 06.2 |
| மொத்தம் | 157,827 | 100.0 |

மூலம் கல்விஅமைச்சு

மேற்காட்டப்பட்ட அட்டவணையின் படி 20 வீதத்திற்கும் அதிகமான ஆசிரியர்கள் பயிற்றப்படாது ஆசிரிய சேவையிலுள்ளமை தெளிவாகிறது.

தேசிய கல்வியியற்கல்லூரி (N.C.O.E.) களினால் தற்போது வழங்கப்பட்டு வரும் கல்வியில் தேசிய டிப்ளோமா ஆரம்பப்பயிற்சிமூலம் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் உருவாகி வருகின்றமை. பயிற்சி பெற்ற பின்னரே ஆசிரியராகின்ற உலகின் புதிய போக்கின் தாக்கம் உணரப்பட்டமையை சுட்டிக்காட்ட முடியும்.

உலக ரீதியான மற்றுமோர் புதிய போக்கு பல்கலைக் கழகங்கள், ஆசிரியர் கல்லூரிகள், பாடசாலைகள் என்பவற்றின் ஒன்றிணைந்த செயற்பாடாகும். இந்த ஏற்பாட்டினபடி இலங்கையிலும் சேவையிலிருக்கும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பட்டப்பின் டிப்ளோமா பயிற்சி நெறி தேசிய கல்வியியற் கல்லூரி வழங்கும் கல்வியில் தேசிய டிப்ளோமா, ஆசிரிய பயிற்சி கல்லூரிகள் முதலிய ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் பாடசாலையுடன் தொடர்புபட்டு உள்ளகக் கட்டுறுப் பயிற்சியினை பூர்த்திசெய்வதற்கான ஏற்பாடுகளைக்கொண்டிருக்கின்றமையை அவதானிக்கலாம்.

அடுத்து உதாரணமாக ஐக்கிய தன்சானியா குடியரசின் ஆசிரிய வள மையங்கள் (Teachers research centre-TRC) அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றமையோடு ஒப்பிடும்போது எமது நாட்டிலும் இதை ஒத்த ஆசிரிய மத்திய நிலையங்கள் (teacher Centere T.C) நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டு அவற்றின் மூலம் ஆசிரியர்கள் ஒன்றுகூடி கல்வி சம்பந்தமான கருத்துப் பரிமாற்றத்திற்கும் மற்றும் சேவைக்கால செயலமர்வுகள் ஆசிரியர் வாண்மை விருத்திக்கான செயலமர்வுகள் மாறும் உலகின் தேவைக் கேற்ப தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழித் திறன் விருத்திச் செயற்பாடுகள் முதலியவை ஆசிரியர் மத்திய நிலையங்களில் செயற்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து இன்று உலகளாவிய ரீதியில் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தில் வெளிப்பட்டு நிற்கும் மற்றுமோர் அம்சம் ஆரம்பக்கல்வி விருத்தியாகும். உதாரணமாக பிரித்தானியாவின் 9/92 (Des 1992) சுற்றறிக்கை மூலம் ஆரம்பக்கல்வி விருத்தி பற்றி வலியுறுத்திக் கூறப்படுகின்றது. இடைநிலை, உயர்தரக் கல்வியைவிட ஆரம்பக் கல்வியானது விளைதிறன் மிக்கதாகவும், சமுதாயத்திற்கு மிகவும் அத்தியாவசியமாகவும் ஆரம்பக்கல்வி முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது.

இலங்கையிலும் தற்போது ஆரம்பக்கல்விக்கான முக்கியத்துவம் மேலோங்கிக் காணப்படுகின்றமையை அவதானிக்கலாம். இதற்கான ஆசிரியர் பயிற்சித் திட்டங்கள் பலவும் நடைமுறைப்படுத்தப்பட்டும் ஆசிரிய நியமனங்களிலும் கூடிய கரிசனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உலகவங்கியின் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களிலும் G.T.Z முதலிய நிறுவனங்களும் ஆரம்பக்கல்வி விருத்தியில் கூடிய அக்கறையுடன் செயற்பட்டு வருவதனை அவதானிக்கலாம். மேலும் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களிலும் உதாரணமாக பயிற்றப்பட்ட பட்டதாரி அல்லாத ஆசிரியர்களுக்கான B.E.D கற்கைநெறி மற்றும் சேவைக்கால செயலமர்வுகள் ஆரம்பக்கல்வி விருத்திக்கு கூடிய முக்கியத்துவம் வழங்கப்படுகின்றமையும் பட்டதாரி நியமனங்கள் தற்போது ஆரம்பப்பிரிவுகளுக்கு வழங்கப்படுகின்றமையும் நோக்கத்தக்கதாகும்.

மேலும் ஆசிரியர் கல்வியை மீளமைப்பதில் தகவல் தொழில்நுட்பத்தின் உள்வாங்குகை உலகளாவிய ரீதியில் முக்கிய அம்சமாகும் இலங்கையில் தற்போது ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களில் தகவல் தொழில்நுட்ப கற்கை நெறிகள் துணைப்பாடங்களாக கொள்ளப்பட்டு வருகின்றன உதாரணமாக ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணிப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினிக் கற்கை நெறிகள் இடம்பெற்றுள்ளமையை சிறப்பாக எடுத்துக் கூறலாம்.

ஆக்கம்
செந்தில் வடிவேல்

இந்த ஏற்பாட்டின் படி உலகளாவிய போக்கில் இன்று பாரம்பரிய கல்விக் கலைத்திட்டத்தில் கற்பிக்கப்படாத பிரச்சினை விடுவித்தல், தொடர் பாடல் திறன், தலைமைத்துவம் போன்ற நடத்தை நுட்பங்களை இன்று தொழில் கொள்வோர் மேலதிகமாக எதிர் பார்க்கின்றனர். (கார்ன வேல்,1994) மேற்கூறப்பட்டதின் படிக்கு உலகளாவிய ரீதியில் இன்று கணினித் தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய விடயங்களின் தேர்ச்சியை இன்றைய வேலை உலகு வேண்டி நிற்பதால், அது இலங்கையின் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களில் பரிணமித்து நிற்கின்றமை ஆச்சரியந்தரும் விடயமல்ல எனலாம்.

இந்த வகையில் இலங்கையின் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தினை மீளவடிவமைப்பதில் உலகளாவிய புதிய போக்குகள் ஆசிரியர் தர விருத்தியிலும் ஆசிரியர் கல்வியை வழங்கும் நிறுவனங்களின் செயற்பாட்டு திறனிலும் போக்கிலும் ஆரம்பக்கல்வி விருத்தியிலும் ஆசிரியர் முன் சேவைப் பயிற்சி, சேவைக்காலப்பயிற்சி மற்றும் நவீன உலகின் தகவல் தொழில்நுட்ப மாற்றங்கள் இலங்கையின் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தினை மீளவடிவமைப்பதில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை விளைவித்துள்ளன என்பதில் ஐயம் இல்லை.

---

**- யாழ்.இல் புலிகள்-படையினர் சந்திப்பு -**

## மக்களின் இயல்பு வாழ்விற்கு இடையூறான அம்சங்கள் குறித்து ஆராய்வு!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறையினர்க்கும், சிறிலங்கா இராணுவ மற்றும் பொலிஸ்தரப்பினர்க்குமிடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் முற்பகல் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட தலைமைச் செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்டப் பொறுப்பதிகாரி ஆன்ஸ்ரா ரான்பேட் தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன் ஆகியோரும் படைத்தரப்பில் யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல்சுனில் தென்னக்கோன் மற்றும் யாழ்.மாவட்ட கடற்படைத்தளபதி கேணல் லால்பிறேமரட்ண ஆகியோர் உட்பட்ட தளபதிகளும் பொலிஸ்தரப்பில் யாழ். மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி ஆனந்த செனவிரட்ண உட்பட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதனிடையே இச்சந்திப்பு வழமையான தோர் மாதாந்தச் சந்திப்பு மட்டுமே எனத் தகவல் தெரிவித்த விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறை வட்டாரங்கள் இச்சந்திப்பின் போது கோவில் வீதியிலுள்ள போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் அலுவலகச் சூழலில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தது.

இச்சந்திப்பின்போது கோவில் வீதியிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகச் சுழலின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தது. யாழ் குடாநாட்டு பொது மக்கள் எதிர்கொள்ளும் இயல்பு வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயம் மற்றும் கடற்படையினரின் பாஸ் நடைமுறை என்பவற்றால் பொதுமக்களும், கடற்றொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோர் எதிர்கொள்ளும் அச்சுறுத் தல்கள் மற்றும் பாடசாலைகளை அண்மித்துள்ள பாதுகாப்பு வலயங்களால் மாணவர்களின் கல்விக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் என்பன பற்றியும் ஆராயப்பட்டதாகவும்,

அத்துடன் சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கான நடைமுறைகள் குறித்தும் இதில் வலியுறுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (33,27)

# பயணியர் பேருந்துப் பணி

## கல்விளான் – புளியங்குளம்

மேற்படி பேருந்துப் பணி 01.10.2004ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கிற்கு அமைவாக நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

### நேர ஒழுங்கு

**கல்விளான் – புளியங்குளம்**

| கல்விளான் | மல்லாவி | வடகாடு | மாங்குளம் | புளியங்குளம் |
|---|---|---|---|---|
| மாலை 02.30 | 03.00 | 03.25 | 04.00 | 04.45 |

**புளியங்குளம் – கல்விளான்**

| புளியங்குளம் | மாங்குளம் | வடகாடு | மல்லாவி | கல்விளான் |
|---|---|---|---|---|
| காலை 08.30 | 09.15 | 09.50 | 10.15 | 10.45 |

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி,
வழியனுமதிப் பணியகம்,
புதுக்குடியிருப்பு.

# பயணியர் பேருந்துப் பணி

## கிளிநொச்சி – முகமாலை

மேற்படி பேருந்துப் பணி 01.10.2004ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கிற்கு அமைவாக நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

### கிளிநொச்சி – முகமாலை

நேர ஒழுங்கு

| கிளிநொச்சி | - பரந்தன - | இயக்கச்சி - | புதுக்காட்டுநகர் | - முகமாலை |
|---|---|---|---|---|
| காலை 06.00 | 06.20 | 06.45 | 06.50 | 07.05 |
| காலை 06.20 | 06.40 | 07.05 | 07.10 | 07.25 |
| காலை 06.40 | 07.00 | 07.25 | 07.30 | 07.45 |
| காலை 07.00 | 07.20 | 07.45 | 07.50 | 08.05 |
| காலை 07.20 | 07.40 | 08.05 | 08.10 | 08.25 |
| காலை 07.40 | 08.00 | 08.25 | 08.30 | 08.45 |
| காலை 08.00 | 08.20 | 08.45 | 08.50 | 09.05 |
| காலை 08.20 | 08.40 | 09.05 | 09.10 | 09.25 |
| காலை 08.40 | 09.00 | 09.25 | 09.30 | 09.45 |
| காலை 09.00 | 09.20 | 09.45 | 09.50 | 10.05 |
| காலை 09.20 | 09.40 | 10.05 | 10.10 | 10.25 |
| காலை 09.40 | 10.00 | 10.25 | 10.30 | 10.45 |
| காலை 10.00 | 10.20 | 10.45 | 10.50 | 11.05 |
| காலை 10.20 | 10.40 | 11.05 | 11.10 | 11.25 |
| காலை 10.40 | 11.00 | 11.25 | 11.30 | 11.45 |
| காலை 11.00 | 11.20 | 11.45 | 11.50 | 12.05 |
| காலை 11.20 | 11.40 | 12.05 | 12.10 | 12.25 |
| காலை 11.40 | 12.00 | 12.25 | 12.30 | 12.45 |
| பகல் 12.00 | 12.20 | 12.45 | 12.50 | 01.05 |
| பகல் 12.20 | 12.40 | 01.05 | 01.10 | 01.25 |
| பகல் 12.40 | 01.00 | 01.25 | 01.30 | 01.45 |
| பகல் 01.00 | 01.20 | 01.45 | 01.50 | 02.05 |
| பகல் 01.20 | 01.40 | 02.05 | 02.10 | 02.25 |
| பகல் 01.40 | 02.00 | 02.25 | 02.30 | 02.45 |
| பகல் 02.00 | 02.20 | 02.45 | 02.50 | 03.05 |
| பகல் 02.20 | 02.40 | 03.05 | 03.10 | 03.25 |
| பகல் 02.40 | 03.00 | 03.25 | 03.30 | 03.45 |
| மாலை 03.00 | 03.20 | 03.45 | 03.50 | 04.05 |
| மாலை 03.20 | 03.40 | 04.05 | 04.10 | 04.25 |
| மாலை 03.40 | 04.00 | 04.25 | 04.30 | 04.45 |
| மாலை 05.00 | 05.20 | 05.45 | 05.50 | 06.05 |

### முகமாலை – கிளிநொச்சி

நேர ஒழுங்கு

| முகமாலை (பளை) | புதுக்காட்டுநகர் | இயக்கச்சி | பரந்தன் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| காலை 07.00 | 07.15 | 07.20 | 07.45 | 08.05 |
| காலை 07.20 | 07.35 | 07.40 | 08.05 | 08.25 |
| காலை 07.40 | 07.55 | 08.00 | 08.25 | 08.45 |
| காலை 08.00 | 08.15 | 08.20 | 08.45 | 09.05 |
| காலை 08.20 | 08.35 | 08.40 | 09.05 | 09.25 |
| காலை 08.40 | 08.55 | 09.00 | 09.25 | 09.45 |
| காலை 09.00 | 09.15 | 09.20 | 09.45 | 10.05 |
| காலை 09.20 | 09.35 | 09.40 | 10.05 | 10.25 |
| காலை 09.40 | 09.55 | 10.00 | 10.25 | 10.45 |
| காலை 10.00 | 10.15 | 10.20 | 10.45 | 11.05 |
| காலை 10.20 | 10.35 | 10.40 | 11.05 | 11.25 |
| காலை 10.40 | 10.55 | 11.00 | 11.25 | 11.45 |
| காலை 11.00 | 11.15 | 11.20 | 11.45 | 12.05 |
| காலை 11.20 | 11.35 | 11.40 | 12.05 | 12.25 |
| காலை 11.40 | 11.55 | 12.00 | 12.25 | 12.45 |
| பகல் 12.00 | 12.15 | 12.20 | 12.45 | 01.05 |
| பகல் 12.20 | 12.35 | 12.40 | 01.05 | 01.25 |
| பகல் 12.40 | 12.55 | 01.00 | 01.25 | 01.45 |
| பகல் 01.00 | 01.15 | 01.20 | 01.45 | 02.05 |
| பகல் 01.20 | 01.35 | 01.40 | 02.05 | 02.25 |
| பகல் 01.40 | 01.55 | 02.00 | 02.25 | 02.45 |
| பகல் 02.00 | 02.15 | 02.20 | 02.45 | 03.05 |
| பகல் 02.20 | 02.35 | 02.40 | 03.05 | 03.25 |
| பகல் 02.40 | 02.55 | 03.00 | 03.25 | 03.45 |
| மாலை 03.00 | 03.15 | 03.20 | 03.45 | 04.05 |
| மாலை 03.20 | 03.35 | 03.40 | 04.05 | 04.25 |
| மாலை 03.40 | 03.55 | 04.00 | 04.25 | 04.45 |
| மாலை 04.00 | 04.15 | 04.20 | 04.45 | 05.05 |
| மாலை 04.20 | 04.35 | 04.40 | 05.05 | 05.25 |
| மாலை 04.40 | 04.55 | 05.00 | 05.25 | 05.45 |
| மாலை 05.00 | 05.15 | 05.20 | 05.45 | 06.05 |

(சி.10231)

முகாமையாளர்,
பேருந்துப் பகுதி,
கிளிநொச்சி

# 6 நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் நியமனம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்கு புதிய பிரதேசச் செயலர்களும் கச்சேரியிலுள்ள இரு வெற்றிடங்களுக்கு இரு நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுமாக ஆறு பேர் நியமனம் பெற்றுள்ளனர்.

இதில், உதவி அரச அதிபர் தலைமைப்பீட அதிகாரியாக செல்வி பரமசாமி ஆரணியும், ஒட்டுசுட்டான் பிரதேச உதவி அரச அதிபராக செல்வி. கந்தையா சுபாசினி, துணுக்காய் பிரதேசச் செயலராக நாகலிங்கம் நந்தகுமார்,

மாந்தை கிழக்குப் பிரதேச செயலளராக மரியதாசன் ஜெகூ, கரைதுறைப்பற்று பிரதேசச் செயலளராக செல்வன் அம்பலவாணன் சே [illegible]நாதன்,

கச்சேரி புனர்வாழ்வுக் கிளை திட்டப் பணிப்பாளராக செல்லத்துரை பிரணவநாதன் ஆகியோரே புதிதாக முல்லை மாவட்டத்தில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.(20)

## வட்டக்கச்சி விவசாயிகள் கவனத்திற் கொள்க

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பகுதியில் 2004 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற் செய்கையின்போது பின்வரும் இடங்களில் இதன் செய்கை மேற்கொள்வது முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

பிரதான வீதியின் இருபக்கமும் உள்ள கழிவுகள், காணிக்குச் செல்லும் பாதைகள், பிரதான வாய்கால்களுக்கு அண்மையாக உள்ள கழிவுகள் இவ் இடங்களில் மீறிப் பயிரிடுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.(12)

## பொதுநோக்கு மண்டபம் திறப்பு

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஊரியான் கிராமத்தில் நியாப் திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட பொது நோக்கு மண்டபம் திறப்பு விழா நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு ஊரியான் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பே.பரமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து பொதுநோக்கு மண்டபத்தினை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் திறந்து வைத்தார். (14)


## கேள்வி அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு கீழ்க்காட்டப்படும் மாதங்களில் நிவாரண விநியோகம் மேற்கொள்வதற்குத் தேவையான கோதுமை மாவினை (பிறிமா கிறீன் பிறான்ட்) வழங்கக்கூடிய இம்மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| விநியோகிக்கப்பட வேண்டிய காலம் | விநியோகிக்கப்பட வேண்டிய தொகை |
|---|---|
| ஒக்ரோபர் - 2004 | 400 மெற்றிக்தொன் |
| நவம்பர் - 2004 | 400 மெற்றிக்தொன் |
| டிசம்பர் - 2004 | 400 மெற்றிக்தொன் |

இதற்கான கேள்விப் படிவங்களையும், மேலதிக விபரங்களையும் இச்செயலகத்தில் 2004.10.03 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

இமெல்டா சுகுமார்
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி-9200)



## வடக்கு – கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

## தரவு நிரற்படுத்துனர் பதவி வெற்றிடத்தினை நிரப்புவதற்கான விண்ணப்பம் கோருதல்

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் உள்ள மேற்படி திட்ட அலுவலகத்தில் தரவு நிரற்படுத்துனர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து 15.10.2004ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் "அரசாங்க அதிபர், கச்சேரி, கிளிநொச்சி". எனும் முகவரிக்கு முடிவுத் திகதிக்கு முன்னதாகக் கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபால் மூலம் விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் தவறாது "நிகொட் அலுவலகத்தில் தரவு நிரற்படுத்துனர் பதவிக்கான விண்ணப்பம்" என பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**தகைமைகள் :-**

மொழி, கணிதம்/தூயகணிதம்/ஆரம்பகணிதம், பௌதீகவியல்/விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் இரண்டிற்கு மேற்படாத அமர்வில் கல்விப்பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

மொழி கணிதம்/எண்கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் அடங்கலாக ஐந்து பாடங்களில் A அல்லது B தர திறமைச்சித்தியுடன், ஆறு பாடங்களில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் புதிய பாடத்திட்டத்தில் கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**இத்துடன்**

பல்கலைகழகத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தாபனம் ஒன்றில் பின்வரும் பகுதிகளில் கணினிப்பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் இருத்தல் வேண்டும்.

01. Windows Operating Systems
02. Microsoft Word
03. Microsoft Excel
04. Microsoft Access
05. Internet and E-mail

இத்துடன் கணினி ஒன்றினை கையாளக்கூடிய திறமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**சம்பளம் :-**

மேற்படி பதவியில் அரச சேவையில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தோடு உத்தியோகத்தர்களின் தகைமை அனுபவங்களைக் கருத்திற்கொண்டு 50 இற்கு மேற்படாத தொகையும் வழங்கப்படும்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-10232)



## கணக்கியல் பயிற்சி நெறிக்கான வேண்டுகை

கணக்கியல் பயிற்சி நெறிக்கு வேண்டுகைகளைப் பொருத்தமான ஆண்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**கல்வித்தகைமை**

01. கல்வித்தகைமை:- க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ், கணிதப் பாடங்களில் தேர்ச்சியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
02. அகவை :- 16 தொடக்கம் 21 வரை.

**குறிப்பு**

01. வேண்டுகை முடிவு நாள் :- 05.10.2004
02. நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள்:- 09.10.2004 காலை 9.00மணி
03. இடம் :- கிளி/மத்தியகல்லூரி. ஏ-9 வீதி, கிளிநொச்சி.
04. நேர்முகத்தேர்வுக்கு வரும்பொழுது கல்வித்தகைமைச்சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், அடையாள அட்டை ஆகியவற்றையும் அவற்றின் நிழற்பட படிகைகளையும் கொண்டு வருக.
05. பயிற்சிக் காலத்தில் 4000 ரூபா உதவிக் கொடுப்பனவுடன் தங்குமிட வசதி வழங்கப்படும்.
06. விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:- பொறுப்பாளர், மனிதவள மேம்பாட்டுப்பகுதி, நாகதம்பிரான் வீதி, கிளிநொச்சி.
07. பயிற்சி நெறிக்காலம் :- ஓர் ஆண்டு.
08. பயிற்சியின் பின் நிதித்துறை நிறுவனங்களில் ஐந்து ஆண்டுகள் பணியாற்ற வேண்டும்.
09. பயிற்சியின் நிறைவில் தகைமைச் சான்றிதழுடன் பொருத்தமான பணி வழங்கப்பட்டு நிதித்துறையின் சம்பளத்திட்டத்திற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

ஆளுகை
மனிதவளமேம்பாட்டுப்பகுதி.

(சி-10234)



## கேள்வி அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு கீழ்க்காட்டப்படும் மாதங்களில் நிவாரண விநியோகம் மேற்கொள்வதற்குத் தேவையான புழுங்கல் (சிவப்புநாடு) அரிசியினை வழங்கக்கூடிய இம்மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களிலிருந்து மட்டும் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றது.

| விநியோகிக்கப்பட வேண்டிய காலம் | விநியோகிக்கப்பட வேண்டிய தொகை |
|---|---|
| ஒக்டோபர்-2004 | 180 மெற்றிக்தொன் |
| நவம்பர் -2004 | 180 மெற்றிக்தொன் |
| டிசம்பர் -2004 | 180 மெற்றிக்தொன் |

இதற்கான கேள்விப்படிவங்களையும்,மேலதிக விபரங்களையும் இச்செயலகத்தில் 2004.10.03ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

இமெல்டா சுகுமார்
அரசாங்க அதிபர்
முல்லைத்தீவு.

(சி.9200)


## வீரவணக்கம்

### 4 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகளில்

தாயின் மடியில் 13 - 04 - 1980



தாயக மண்ணில் 25 - 09 - 2000

*தமிழீழ காவல் துறை தலைமைக் காவலர்*

**சி.சுதர்சன்**

*(சின்னராசா சுதர்சன்)*

*த.மு இரணைமடு கிளிநொச்சி*

முகமாலைப் பகுதியில் எதிர்பாராத வெடிவிபத்தின் போது சாவடைந்தார். இம்மாவீரருக்கும், இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"தமிழீழ காவல்துறையினர்" (5120)

# மேற்கிந்தியத்தீவுக்கெதிராக முதலில் துடுப்பாட்டத்தைத் தீர்மானித்தது சரியானதே!



## இன்சமாம் உல்ஹக்

"மேற்கிந்தியத்தீவுக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது சரிதான்" என்று பாகிஸ்தான் அணி தலைவர் இன்சமாம் கூறியுள்ளார்.

மினி உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் 2-ஆவது அரையிறுதி ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவு அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானைத் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாட முடிவெடுத்ததில் தவறு இல்லை. நாங்கள் ஒரு கட்டத்தில் ஒரு விக்கெட்டுக்கு 65 ஓட்டம் என்ற நிலையில் இருந்தோம். அதன்பிறகுதான் துடுப்பாட்டத்தில் சரிவு ஏற்பட்டது. நல்ல தொடக்கத்தை துடுப்பாட்டக்காரர்கள் பொறுப்பின்றி ஆடி வீணடித்து விட்டனர்.

அந்த ஆடுகளத்தில் 220 ஓட்டம் எடுத்திருந்தாலே போதும் 2ஆவது துடுப்பாட்டம் செய்து வெற்றி இலக்கை எட்டுவது கடினமாகும் தோல்விக்கு நான் பொறுப்பேற்கிறேன். மேற்கிந்திய அணியின் பந்துவீச்சு சிறப்பாக இருந்ததெனவும் இன்சமாம் கூறினார்.

## பிரைன்லாறாவே எமது இலக்கு



ஓவல் மைதானத்தில் இன்று நடைபெறும் ஐ.சி.சி வெற்றிக் கிண்ணத் துக்கான இறுதிப் போட்டியில் மேற்கிந்தியத்தீவு அணியின் தலைவர் லாறாவை மடக்குவதே தமது இலக்காக அமையும் என்று இங்கிலாந்து அணி தெரிவித்துள்ளது.

இவ்விரு அணிகளும் பலம் வாய்ந்த நிலையில் களம் இறங்குகின்றன. அரையிறுதிப் போட்டியில் பாகிஸ்தானை எதிர்கொண்ட மேற்கிந்தியத்தீவு அணியின் தலைவர் பிரைன்லாறா அக்தரின் பந்துவீச்சில் காயமடைந்தார்.

இவர் விளையாடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளபோதும் வேகப் பந்து வீச்சை எதிர்கொள்வதில் லாறா சிரமப்படுவதாக இங்கிலாந்து அணித்தலைவர் வோன் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவுடனான முதல் டெஸ்ட்; அணித்தலைவராக அடம்கில்கிறிஸ்ட்



இந்திய அணியுடன் பெங்களூரில் ஒக்டோபர் 6ஆம் திகதி முதல் நடைபெறும் முதல் டெஸ்ட் போட்டிக்கு விக்கெட் காப்பாளர் அடம்கில்கிறிஸ்ட் அணித்தலைவராக இருப்பார் என கிரிக்கெட் அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

அணித்தலைவர் ரிக்கிபொண்டிங் காயம் காரணமாக முதல் டெஸ்ட்டில் விளையாடவில்லை. அவருக்குப் பதிலாக 29 வயதாகும் விக்டோரியா அணி வீரர் பிராட் ஹாட்ஜ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய அணித் தேர்வுக்குழுத் தலைவர் டிரெவர் ஹான்ஸ் வியாழக்கிழமை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அதே சமயம் சென்னையில் ஒக்டோபர் 14 முதல் நடைபெறும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ரிக்கி பொண்டிங் விளையாடுவார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் நடைபெறும் புரா கோப்பை, கவுண்டி போட்டிகளில் ஹாட்ஸ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார். சுழற்பந்து வீச்சாளர்களைச் சமாளிக்கும் ஆற்றலும் கொண்டுள்ளார். அத்துடன் பொண்டிங்கிற்கு நிகரான ஆட்டத்தை வெளிப்படுத்துவார் என்பதை அறிந்து அவரைத் தேர்வு செய்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார் ஹான்ஸ். முதல் முறையாக டெஸ்ட் போட்டியில் விளையாடுகிறார் பிராட் ஹாட்ஜ்.

## ஒலிம்பிக் சம்பியனை வீழ்த்தி அஞ்சு ஜோர்ஜ் தங்கம் வென்றார்




சர்வதேச தடகளப் போட்டியில் இந்தியாவின் அஞ்சு ஜோர்ஜ் தங்கம் வென்றார். சர்வதேச தடகளப் போட்டி ஜப்பான நாட்டில் உள்ள யொக்ககாமா நகரில் நடந்து வருகிறது. இந்தப் போட்டிக்கான பெண்கள் நீளம் தாண்டுதலில் இந்தியாவின் அஞ்சுஜோர்ஜ் தங்கப் பதக்கம் வென்றார்.சர்வதேச தரவரிசையில் 6 ஆவது இடத்தில் இருக்கும் அஞ்சு இந்தப் போட்டியில் 6.61மீற்றர் தாண்டி தங்கப்பதக்கத்தைத் தட்டிச் சென்றார். சமீபத்தில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றவரும், தரவரிசையில் முதலிடத்தில் இருப்பவருமான ரஷ்யாவின் தத்யான லெபடோவா 2ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டார்.




# ஐ.சி.சி.மினி உலகக்கிண்ணம் யாருக்கு?

# வோன்,லாறா இன்று பலப்பரீட்சை


லாறா



வோன்

ஐ.சி.சி மினி உலகக் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டி இன்று ஓவல் மைதானத்தில் இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவு அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

ஐ.சி.சி கிண்ணப் போட்டிகளை பொறுத்தவரை நீண்டகாலமாக மிகப் பெரிய போட்டிக்குள் நுழையாத ஒரு அணி பிரவேசித்துள்ளது. இங்கிலாந்து அணி இதுவரையில் அதாவது ஐ.சி.சி மினி உலகக் கிண்ணம், அதற்கு மேலாக மிகப் பெரிய கிண்ணமாகக் கருதப்படும் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் இதுவரை கிண்ணத்தைக் கைப்பற்றாத நிலை நீடிக்கின்றது.

அதேபோன்று முதல் தடவையாக மினி உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

மேற்கிந்தியத் தீவு அணியைப் பொறுத்தமட்டில் கடந்த இரு வருட களாக அடிமேல் அடிவாங்கி வீழ்ந்துபோய் கிடந்ததுடன், அணித்தலைவர் தொடர்பிலும் பல சர்ச்சைகளை ஏற்படுத்திய நிலையில் புதுவேகம் பெற்று ஐ.சி.சி இறுதிப் போட்டிக்கு இரண்டாவது தடவையாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்துள்ளது.

இந்த நிலையில் இரு அணிகளுமே சமபலம் பொருந்திய நிலையில் காணப்படுகின்றது.

இங்கிலாந்து அணியைப் பொறுத்தவரை அன்ரூபிளிண்டொப் சகல துறைகளிலும் பிரகாசிப்பதால் கொஞ்சம் பலம் அதிகம் என்று கூறலாம்.

இது இவ்வாறிருக்க நாணயச் சுழற்சியில் வெற்றிபெறும் அணிக்கே அதிக வாய்ப்புக்கள் இருப்பதாகக் கிரிக்கெட் வர்ணனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## ஒலிம்பிக் புதிய போட்டிகள்

ஒலிம்பிக்கில் கராத்தே உட்பட ஐந்து விளையாட்டுக்களை புதிதாகச் சேர்க்க சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி ஆலோசனை நடத்துகிறது.

ஒலிம்பிக் போட்டிகளில் தற்போது மொத்தம் 28 வகையான விளையாட்டுக்கள் இடம்பெற்று வருகின்றன. உலகம் முழுவதும் ஒலிம்பிக்கை பிரபலப்படுத்த ஐந்து விளையாட்டுக்களை புதிதாக சேர்க்க சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி ஆலோசித்து வருகிறது. நேற்று முன்தினம் லண்டனில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் ரக்பி, கராத்தே, கோல்ப், ஸ்குவாஷ் மற்றும் ரோலர் ஸ்போர்ட்ஸ் ஆகிய ஐந்து விளையாட்டுக்களைச் சேர்ப்பது பற்றி விவாதிக்கப்பட்டது. 2012, ஒலிம்பிக் போட்டிக்கான இடத்தைத் தேர்வு செய்யும் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் கூட்டம் வரும் 2005 ஜூலையில் சிங்கப்பூரில் நடக்கவுள்ளது. இந்தக் கூட்டத்தின் போது இந்த ஐந்து விளையாட்டுக்களையும் சேர்ப்பது குறித்த இறுதி முடிவு எடுக்கப்படும் எனத் தெரிகிறது.

# முல்லை மாவட்டத்தில் கராத்தே சுற்றுப் போட்டியும்,பயிற்சி வகுப்பும்



2004 ஆம் ஆண்டு மேஜர் ஈழப்பியா ஞாபகார்த்த கராத்தேப் போட்டியை முன்னிட்டு முல்லை மாவட்ட விளையாட்டுத்துறையினரால் முல்லை மாவட்டக் கராத்தே சுற்றுப்போட்டி நேற்று காலை 9 மணிக்கு மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கனிமொழியன் தலைமையில் புதுக்குடியிருப்பு மாகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பொதுச்சுடரினை கரைதுறைப்பற்று விளையாட்டு உத்தியோகஸ்தர் குமார் ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியினை முல்லைமாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து சிறப்புரையினை முல்லைமாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன்,தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் ஆகியோர் ஆற்றினர். இப் போட்டியின் பிரதம நடுவராக சீகான் றொபேர்ட் அவர்களின் முதன்மை மாணவன் சந்தனகுமார கலந்து கொண்டார். இன்றைய தினம் முல்லை மாவட்ட வீரர்களுக்கான கராத்தேப் பயிற்சி நெறியினை நடாத்துவதற்கு முல்லை மாவட்ட விளையாட்டுத்துறையினர் ஏற்பாடு செய்துள்ளனர். (08)

# அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் புதுமுக வீரர்களை அணியில் சேர்க்க விருப்பம்

## கங்குலி

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் புதுமுக வீரர்களை அணியில் சேர்க்க வேண்டும் என்று இந்திய அணித் தலைவர் கங்குலி விருப்பம் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் நடந்த மினி உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டியில் கங்குலி தலைமையிலான இந்திய அணி அரையிறுதிக்குக் கூட தகுதி பெறாமல் போட்டியில் இருந்து வெளியேறியது. இந்த நிலையில் அணி வீரர்கள் தாயகம் திரும்பினர்.

இந்திய அணியின் துடுப்பாட்டம் கடந்த சில மாதமாகக் கவலை அளிக்கும் விதத்தில் மிகவும் மோசமாக உள்ளது.


முன்னணித் துடுப்பாட்டக்காரர்கள் யாரும் சிறப்பாக ஆடவில்லை. அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டித் தொடரின் போது புதுமுக வீரர்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். நடந்து கொண்டிருக்கும் இரா்ணி கோப்பை கிரிக்கெட்டின் முடிவில் புதுவீரர்கள் அணியில் இடம் பெறுவது குறித்து முடிவு செய்யப்படும் எனவும் கங்குலி தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் கராத்தே பயிற்சி வகுப்பு

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் சர்வதேச கராத்தே சம்மேளனத் தொடர்பாளர் சென்சி லீ.சிமித் (6ஆவது டான்) என்பவர் லண்டனில் இருந்து ஜப்பானிய கராத்தே நிபுணர் மாசே கவாசோ (8ஆவது டான்) அவர்களின் பிரதிநிதியாக இம் மாதம் 28ஆம் திகதி கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளார். எனவே இவரூடாக எமது வட, கிழக்குப் பகுதிகளில் கராத்தே கலையை பயின்று வரும் அனைத்து ஆண், பெண் வீரர்களுக்குமான பயிற்சி வகுப்பொன்று இவரூடாக 29,30/09/2004ஆம் திகதிகளில் காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. அத்துடன் வட,கிழக்கு கராத்தே வீரர்களின் ஆர்வத்தையும், தனித்துவத்தையும் லீ.சிமித் நேரில் பார்வையிட்டு மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் சான்றிதழ்களையும் வழங்கவுள்ளார்.

எனவே மாவட்ட ரீதியில் உள்ள அனைத்துக் கராத்தே வீரர்களும் தங்கள் பதிவுகளை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு செய்வதுடன், நிகழ்வுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கேட்டு கொள்வதுடன் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் அனைவரும் கராத்தே சீருடையுடன் கலந்து கொள்ள வேண்டும் என்பதையும் மாவட்ட ரீதியான விபரங்கள் யாவும் 25/09/2004 இற்கு முன் தமிழீழ விளையாட்டுத்துறை நடுவப்பணியகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் மேலதிக விபரங்களுக்கு 021-2285715 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அனைத்து மாவட்ட கராத்தே சங்க நிர்வாகத்தினரையும் தமிழீழ விளையாட்டுத்துறையினர் கேட்டுக் கொள்கின்றனர். (20)

## சிந்தனைக்கு



• அறப்போரிலும் சரி, ஆய்துப் போரிலும் சரி, எமது விடுதலைப் போர் உலக சாதனைகளைப் படைத்து வருகின்றது; மனித ஈகையின் சிகரத்தை எட்டியிருக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 25-09-2004



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com


## சந்திரிகா மாறவில்லை!

ஐ.நா. பொதுச் சபையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆற்றிய உரையும் வழமைபோலவே குழப்பத்தையும், முரண்பாட்டையும் கொண்டதாகவே அமைந்துள்ளது. இதுவரை இலங்கைக்குள் பேசிவந்தது போன்று உலக பொதுமன்றமாகிய ஐ.நா. சபையிலும் சனாதிபதி சந்திரிகா உண்மையைப் பேசவோ, யதார்த்தத்தைப் பிரதிபலிக்கவோ தவறிவிட்டார்.

ஐ.நா. பொதுச் சபையில் சனாதிபதி சந்திரிகா ஆற்றிய உரையில் பேச்சுவார்த்தை தொடர்பாக இரண்டு முக்கிய விடயங்களை அவர் வெளிப்படுத்தியுள்ளார். இதில் ஒன்று, விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு வராமல் மறுத்து வருகின்றனர் என்பது, இரண்டாவது இறுதித் தீர்வு பற்றிப் பேசவே அரசாங்கம் விரும்புகின்றது என்பது.

சனாதிபதி சந்திரிகாவின் விடுதலைப்புலிகள் மீதான இக்குற்றச்சாட்டானது உண்மைக்கு மாறானதொன்றாகும். விடுதலைப்புலிகள் எப்பொழுதுமே பேச்சுவார்த்தை மேசைக்கு வர மறுப்புத் தெரிவிக்கவில்லை. பேசப்படும் விடயம் குறித்து பேச்சுவார்த்தைக்கு முன்னதாக உறுதி செய்யவே விளைந்துள்ளனர்.

அது மட்டுமல்ல, பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் சூழ்நிலை உருவாகிய வேளையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திடம் இருந்து சனாதிபதி சந்திரிகாவே ஆட்சியைப் பறித்துக் கொண்டார். அதற்குப் பின்னர் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படாமல் போனமைக்குச் சனாதிபதி சந்திரிகாவின் பேச்சுவார்த்தை தொடர்பான உறுதியற்ற நிலைப்பாடே காரணமாகும்.

அதாவது, நோர்வே ஏற்பாட்டாளர்கள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்ட வேளைகளில் சனாதிபதி சந்திரிகா நேரத்திற்கு நேரம் வேறுபாடான நிலைப்பாட்டை மேற்கொண்டார். முதலில் இறுதித் தீர்வு பற்றியே பேசப்படும் என்றார். பின்னர் இடைக்கால நிர்வாக சபை குறித்துப் பேசத்தயார் என்றார். அடுத்து இடைக்கால நிர்வாக சபை குறித்து மாற்று யோசனையை அரசாங்கம் தயாரிப்பதாகத் தகவல்கள் தெரிவித்தன. இறுதியாக தேசிய ஆலோசனைச் சபை ஒன்று அமைக்கப்படும் எனச் சந்திரிகா தெரிவித்தார். நோர்வேத் தரப்பும் பல தடவை கொழும்பு வந்து சென்றபோதும், பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான திகதியை நிர்ணயம் செய்ய முடியவில்லை.

இரண்டாவது இறுதித் தீர்வு பற்றிப் பேசவே அரசாங்கம் விரும்புகின்றது என்பது. இது வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதை போன்றது. இடைக்கால நிர்வாக சபையே பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான அடிப்படையாக அமைய வேண்டும் எனத் தொடர்ச்சியாகத் தெரிவிக்கப்பட்டு வருவதோடு, அது தொடர்பாகப் பேச அரசாங்கம் தயாராக உள்ளது என அண்மையில் கூறிய சனாதிபதி சந்திரிகா மீண்டும் இறுதித்தீர்வு பற்றிப் பேசவே விரும்புவதாகக் கூறுவதை மேற்கூறப்பட்டது போல் அல்லாது வேறு எவ்வாறு கூறமுடியும்?

இவை ஒருபுறம் இருக்க, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐ.நா. சபையில் ஆற்றிய உரை என இரண்டு வகைப் பிரதிகள் வெளியிடப்பட்டதாக ஐ.தே.கட்சி குற்றம்சாட்டியுள்ளது. இதன் பிரகாரம் 21ஆம் திகதி சர்வதேச சமூகத்திற்கு விநியோகிக்கப்பட்ட அறிக்கைக்கும், கொழும்பில் 22ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட அறிக்கைக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளதாக அது தெரியவருகின்றது.

இந்த வகையில், 21ஆம் திகதி சர்வதேச சமூகத்திற்கு வெளியிட்ட பிரதியில், நோர்வே அரசின் செயற்பாட்டிற்குப் பாராட்டுத் தெரிவித்துள்ள அதேவேளை, விடுதலைப்புலிகளின் செயற்பாடு பற்றியும் விமர்சிக்கப்பட்டிருந்தது, இதேசமயம் 22ஆம் திகதி கொழும்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் இவையிரண்டும் நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றது.

இதனைப் பார்க்கையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சர்வதேச சமூகத்தையும், இலங்கை மக்களையும் ஒருங்கு சேர ஏமாற்ற முற்பட்டுள்ளார் என்றே கொள்ள வேண்டியதாகவுள்ளது. அதாவது, வெளியுலகிற்கு விடுக்கப்பட்ட பிரதியில் நோர்வே அரசைப் பாராட்டுவதன் மூலம் சர்வதேச சமூகத்திடம் நற்பெயரைச் சம்பாதித்துக் கொள்ளவும், உள்நாட்டில் நோர்வேயைப் பாராட்டுதலைத் தவிர்த்தல் மூலம் ஜே.வி.பி. உட்பட்ட இனவாத சக்திகளிடம் இருந்து தம்மைப் பாதுகாக்கும் வகையிலும் சனாதிபதி சந்திரிகா நடந்து கொண்டுள்ளார்.

அதாவது, சனாதிபதி சந்திரிகா ஐ.நா. பொதுச்சபையில் உரையாற்றிய போது கூடத் தனது முரண்பாடுகளையும், குழப்பகரமான அறிவிப்புக்களையும் கைவிடவில்லை என்றே கொள்ள வேண்டியுள்ளது. இந்நிலையில், சனாதிபதி சந்திரிகாவுடன் உறுதியான சாட்சியங்கள் இன்றியோ, ஆதாரங்கள் இன்றியோ எவ்வாறு பேச முடியும்? ஏற்கனவே, 1995இல் புலிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தை முறிவடைவதற்குக் காரணமாக இருந்துவிட்டு, புலிகள் மீது குற்றச்சாட்டை சுமத்த முனைந்ததை எவ்வாறு மறந்துபோக முடியும்?

# பேச்சுவார்த்தைகள் தொடங்குமுன்கட்சிகளிடையே பொது இணக்கப்பாடு ஏற்படவேண்டும்

### நிதியமைச்சர் சரத்அமுனுகம தெரிவிப்பு

சமாதானப்பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு முன்னர் அரசியல் கட்சிகளுக்கு மத்தியில் பொது இணக்கப்பாடு ஏற்பட வேண்டுமென நிதியமைச்சர் கலாநிதி சரத்அமுனுகம சுட்டிக் காட்டியுள்ளார்.

பேசப்படும் விடயங்கள் தொடர்பாக கருத்தொற்றுமை ஏற்படுத்திக் கொண்டால் சமாதான முயற்சிகள் வெற்றியடையுமென அவர் தெரிவித்தார். கொழும்பு மகாவலி நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவை ஆற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான பெரும்பாலான அரசியல கட்சிகளுக்கு மத்தியில் ஒரே மாதிரியான கருத்துக்கள் நிலவுவதால், பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது சிரமமான காரியம் அல்ல, என்று கூறினார்.

பேச்சுக்களைத் தொடங்கும் விடயத்தில் சர்வதேச சமூகம் அரசாங்கத்திற்கு சார்பான நிலைப்பாட்டையே கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரதி அமைச்சர் உட்பட 13 பேருக்கு நீதிமன்றிற்கு சமுகம் தர ஆணை

(கொழும்பு)

பிரதி அமைச்சர் உட்பட 13 பேருக்கு நீதி மன்றிற்கு சமுகம் தருமாறு ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

சிறிலங்காவின் விவசாய, கால் நடை மற்றும் நீர்ப்பாசனத்துறைப் பிரதி அமைச்சர் விமல் ரட்நாயக்கவுடன் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திமுது பண்டார அபயக் கோனையும் ஒக்ரோபர் மாதம் 25ஆம்திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு மாத்தளை மாவட்ட நீதவான் ஆனையை விடுத்துள்ளார்.

ஏனைய பதினொரு நபர்களும் இதே தினத்தில் ஆஜராகுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2000ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதி சட்ட விரோதமாகக் கூடியதுடன் அதிகாரமற்ற ஆர்ப்பாட்டத்தை நடாத்தி, மாத்தளை பொலிஸ் தலைமையகத்தின் மீது கற்களை வீசிச் சேதம் ஏற்படுத்திய தாகக்குறித்த இப்பதின்மூன்று பேர் மீதும் குற்றம் சாட்டி பொலிசாரால் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவர்கள், கடந்த ஐந்து மாதங்களுக்குமுன் விடுவிக்கப்பட்டிருந்தனர் என "டெய்லி மிரர்" ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

# உணவுப் பொருள் தட்டுப்பாட்டைத் தவிர்க்க சேமிப்புத் திட்டமொன்றைச் செயற்படுத்த முடிவு

### பிரதி அமைச்சர் சிறிபால கமலத் தெரிவிப்பு

(கொழும்பு)

உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடான சூழ்நிலை ஏற்பாட்டால் அதனை நிவர்த்தி செய்யும் முகமாக அத்தியாசிய உணவுப் பொருட்களைச் சேமித்து வைக்க அரசாங்கம் திட்டங்களைச் செயற்படுத்தி வருவதாக விவசாய, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் கூட்டுறவு அபிவிருத்திப் பிரதி அமைச்சர் சிறிபால கமலத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாடொன்றில் கருத்துத் தெரிவித்த அவர் இது குறித்து கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டிருப்பதாகவும், விரைவில் அது அமைச்சரவையில் கலந்துரையாடப்படும் என்றும் கூறியுள்ளார்.

மேலும் கூட்டுறவுச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கும் ஆலோசிக்கப்படுவதாகவும், அடுத்த பத்து நாட்களுக்குள் இந்தியாவில் இருந்து ஐயாயிரம் மெற்றிக்தொன் கோதுமையை அரசாங்கம்இறக்குமதி செய்யவுள்ளதாகவும், அடுத்த வருடம் சனவரி மாத இறுதிவரை கோதுமை இறக்குமதி தொடரும் என்றும் பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

# பாதுக்கவில் மண்சரிவு இருவர் பலி; 4பேர் படுகாயம்

அபிஷாவல, பாதுக்க போன்ற இடங்களில் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவில் நேற்றுக்காலை இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை கடும் மழை காரணமாக களுத்துறை, இரத்தின புரி ஆகிய மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. பாதுக்கவில் இறப்பர்த் தொழிற்சாலை ஒன்றிற்கு அருகில் இருந்த மலைப்பிரதேசத்தில் இம் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. தொழிற்சாலையில் பணியாற்றிய ஊழியர்களே இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### யாழ்.உரும்பிராய்ப் பகுதியில்

# கண்ணிவெடியகற்றும் பணியாளர் மிதிவெடியில் சிக்கிப் படுகாயம்

வலிகாமத்தின் உரும்பிராய்ப் பகுதியில் கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த "ஹலோ ரஸ்ற்" கண்ணிவெடியகற்றல் தொண்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் மிதிவெடியில் சிக்கி படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை 9 மணியளவில் இடம்பெற்ற இவ்அசம்பாவிதத்தில் சிக்கி குறித்த பகுதியில் கண்ணிவெடியகற்றும் பணியிலீடுபட்டிருந்த பணியாளரான ஆர்.பகீரதன (வயது 26) எனும் பணியாளரே படுகாயமடைந்துள்ளார்.

இவரது காலொன்று துண்டிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார். (27)

## துப்பாக்கியுடன் கைது

(கொழும்பு)

துப்பாக்கியுடன் பாதாள உலகக குழுவைச் சேர்ந்த நபர் ஒருவரை மௌன்ட்ல வேனியா பொலிசார் கைது செய்துள்ளனர். 9.9மில்லி மீற்றர் பிஸ்டலும், அதற்குரிய தோட்டாக்கள் மூன்றும் வைத்திருந்த இந்நபர் பல குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்டவர் என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தப்பியோடிய இராணுவச் சிப்பாய் ஒருவரிடமிருந்தே தனது பாதுகாப்பிற்காக இந்த பிஸ்டலை தான் விலைக்கு வாங்கியதாகத் தெரிவித்த குறித்தபாதாள உலகக் குழு நபர் நீதிமன்றில் முற்படுத்தப் பட்டுத் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

### அனைத்துப் பரீட்சைகளுக்கும்

# தே.அ.அட்டையைக் கட்டாயமாக்க பரீட்சைத்திணைக்களம் திட்டம்

(கொழும்பு)

பரீட்சைத்திணைக்களத்தினால் நடாத்தப்படும் சகல பரீட்சைகளுக்கும் தேசிய அடையாள அட்டையைக் கட்டாயமாக்குவது குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் திட்டமிட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டை மட்டுமன்றி தபாலட்டை, கடவுச்சீட்டு மற்றும் சமாதான நீதவான், பாடசாலை அதிபர், ஆணைக்குழு அலுவலர் ஆகியோரினால் உறுதிப்படுத்தி கையொப்பமிடப் பட்ட புகைப்படம் என்பவற்றை சமர்ப்பித்தும் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

## கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை ஆரம்பம்

இலங்கையில் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரியும், மேலும் சில கோரிக்கைகளை உள்ளடக்கியும் ஜாதிக ஹெல உறுமய, அரசாங்கத்திற்கு முன்வைத்துள்ள மனுவிற்கான கையெழுத்துக்களைச் சேகரிக்கும் நடவடிக்கை நேற்றுக் கண்டியில் ஆரம்பமானது.

# பொங்கு தமிழ் வணக்கத்துடன் ரொரன்ரோவில்

# பொங்குதமிழ் நிகழ்விற்கு தயாராகும் ஈழத்தமிழர்

கனடா ரொரன்ரோ நகரெங்கும் தமிழர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் போது பொங்குதமிழ் வணக்கங்களைத் தெரிவித்து இன்று தமது வரலாற்று நிகழ்வுகளிற்காகத் தயாராகி வருகின்றனர்.

தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர வேண்டுமெனவும், கனேடிய அரசு பேச்சுவார்த்தை முயற்சிகளில் காத்திரமான பங்கை வகிக்க வேண்டுமெனவும் முக்கியமாகக் கோரும் இந்நிகழ்வு இலங்கைத் தீவு தொடர்பாக மிகவும் முக்கியஸ்தம் வாய்ந்த நிகழ்வாக மாற்றப்பட்டுள்ளது. தமது இனவாதப் போக்கை தமிழர்களுக்கு எதிராக மேற்குலகிலும் நடைமுறைப்படுத்த சிங்கள இனவாதிகளும் அவர்களது அடிவருடிகளும் முயல்வதன் ஒருகட்டமாக, இந்தப் பொங்குதமிழ் நிகழ்வையும் தடுத்து நிறுத்தப் பலவழிகளிலும் முயன்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனினும் ஏகோபித்த மக்கள் ஆதரவுடன் முன்னெடுத்துச் செல்லப்படும் இந்நிகழ்வில் தமிழர்கள் மத்தியிலுள்ள அனைத்து ஊடகங்கள், அமைப்புக்கள், வியாபார நிறுவனங்கள் முழுதாகச் சங்கமித்து கனேடியத் தமிழர்களின் ஒற்றுமையின் பாரிய வெளிப்பாடாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது. இந்தவகையில் கனடாவில் வாழும் தமிழர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் போது, பொங்குதமிழ் வணக்கத்தைத் தெரிவித்து இன்றைய வரலாற்றுப் பெருநாளிற்காக ஆயத்தமாகி வருகின்றனர்.

இதேவேளை ரொரன்ரோ குயின்ஸ்பாக் மைதானத்தில் இன்று நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வுக்கு பன்னாட்டுப் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டுள்ளனர். பிரமாண்டமான மேடை அங்கு அமைக்கப்பட்டு பொங்குதமிழ் உரைகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

அதேவேளை விழா நடைபெறும் மைதானத்தில் பெரிய திரை அமைக்கப்பட்டு, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்று நிகழ்வுகளைச் சித்திரிக்கும் காட்சிகள் காண்பிக்கப்படவுள்ளன.

## விபத்தில் யுவதி காயம்

(செட்டிகுளம்)

குஞ்சுக்குளம் பகுதியில் நேற்று மாலை 3.மணியளவில் இடம் பெற்ற வீதி விபத்தில் யுவதி ஒருவர் காயம் அடைந்துள்ளார்.

துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்தபோது பின்னால் வந்த பாரஊர்தி மோதியதில் 24வயதான கல்யாணி என்ற பெண்ணே காயமடைந்துள்ளார்.

காயம் அடைந்தவர் மாங்குளம் திலீபன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (20)

## யாழ். இல்.சிறப்புற நடைபெற்ற "போர் நடந்த மண்ணில்" வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

"புலிகளின்குரல்" நிறுவனத்தின் வெளியீடான "போர்நடந்த மண்ணில்" நூல் வெளியீட்டு விழா நேற்று மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

நிகழ்வினை அருட்தந்தை ஜெயசேகரம் அவர்கள் பொதுச்சுடர் ஏற்றி ஆரம்பித்து வைக்க, தமிழீழ தேசியக் கொடியினை "புலிகளின் குரல்"நிறுவனப்பொறுப்பாளர் தமிழன்பன் அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மாவீரர் லெப்.அர்ச்சனா அவர்களின் தந்தையார் சதாசிவம் அவர்கள் ஈகச்சுடர் ஏற்றிவைக்க, அகவணக்கத்துடன் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.




சங்கநாதம் கலைஞர்களின் மாவீரர் வணக்க அஞ்சலியுடன் ஆரம்பித்த நிகழ்வில்- வரவேற்புரையினை புலிகளின்குரல் நிறுவன நிர்வாக இணைப்பாளா இராஜேஸ்வரன் நிகழ்த்தினார். போராளி வெற்றிச்செல்வி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்புரையினை யாழ்.மாவட்ட அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் செம்மணன் நிகழ்த்தினார். வெளியீட்டுரையினை தி. தவபாலன், மதிப்பீட்டுரையினை பொன். பூலோகசிங்கம் ஆகியோர் நிகழ்த்தினார்கள். தொடர்ந்து நூலின் முதற்பிரதியினை யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கயல்விழி வெளியிட்டு வைக்க யாழ். மாவட்டதேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சொலமன் சூ.சிறில் அவர்கள் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன. வெளியீட்டுவிழா நிகழ்வின் இறுதியில் சங்கநாதக் கலைஞர்களின் நாட்டிய நிகழ்வும் இடம்பெற்றது. (செ,27)

# புலிகளுடனான அதிகாரப் பகிர்விற்கு அரசாங்கத்தை உடன்படச் செய்ய முடியுமாம்!

## சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அதிகாரப்பகிர்வை ஏற்படுத்திக் கொள்வதற்கான இணக்கப்பாட்டைக் கூறும் விடயத்தில் தமது அரசை உடன்படச்செய்ய முடியுமென நம்புவதாக சனாதிபதி சந்திரிகா நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சனிடம் தெரிவித்துள்ளார் என சனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் இவரைச் சந்தித்தவேளை சனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

சமாதானத்திற்கும், நல்லிணக்கத்திற்குமான தேசிய ஆலோசனைச்சபை எதிர்வரும் ஒக்ரோபர் 04 ஆம் திகதி நடக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இதற்கு எதிர்க்கட்சித் தலைவர்கள், ஏனைய அரசியல்கட்சித்தலைவர்கள் மதத் தலைவர்கள், சமூகஅமைப்பு பிரதிநிதிகள்ஆகியோருக்கு அழைப்பு விடுத்துள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சமாதானப்பேச்சுவார்த்தைகளைத் தாமதமில்லாமல் மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக சனாதிபதியின் கருத்துக்களைப் புலிகளுக்கு அறிவிக்க நோர்வே வெளிவிவகார அமைச்சர் இணங்கியுள்ளார்.

இச்சந்திப்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், சனாதிபதியின் செயலாளர் கருணாரட்ண ஐக்கிய நாடுகளில், உள்ள இலங்கைப் பிரதிநிதி பேனாட் குணதிலக, சமாதானச் செயலக செயலாளர் நாயகம் ஜயந்த தனபால ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தெரிவானோர் விபரம் இன்று பார்வையிடலாம்

தமிழீழ மாணவர் அமைப்பின் இலவச கணனிப் பூங்காவுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர் பெயர் விபரத்தை நேர்முகத் தேர்வு நடைபெற்ற தமிழீழ மாணவர் அமைப்பு நடுவப்பணியகத்தில் இன்று காலை பார்வையிடலாம் என்பதைத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அறியத்தருவதோடு, தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரும் நாளை காலை 9.00 மணிக்கு வகுப்புக்கு சமுகமளிக்குமாறு தமிழீழ மாணவர் அமைப்புக் கேட்டுக் கொள்கிறது.

### ஜெயந்தன்....

இச் சம்பவத்தைத் தொடர்ந்து அவர்களுடனிருந்த வேறு சிலர் பாதுகாப்பானஇடங்களை நோக்கித் தப்பியோடியுள்ளனர். நடவடிக்கைக் குழுவினர் தொடர்ந்தும் காடுகளைச் சல்லடை போட்டுத் தேடி வருகின்றனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளால் நேற்று முன்தினம் குடும்பிமலைப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் றெஜியுடன் உயிரிழந்த மேலும் நால்வரின் பெயர்கள் இராணுவத் தரப்பால் வெளியிடப்பட்டுள்ளன. ரவிநாதன், நிலாம்ராஜா தியாகராஜா மற்றும் செல்வஅம்மான் ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை உயிரிழந்தவர்களின் சடலங்கள் தற்சமயம் தொப்பிகல காட்டுப்பகுதிக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாக இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது

### இலங்கை...

ளார் இதேவேளை ஐ.நா. நிறுவனத்தின் இலக்குகள் எந்தளவிற்கு ஒவ்வொரு நாட்டையும் சென்றடைந்துள்ளன என்பன பற்றிய மதிப்பீடு ஒன்று விரைவில் மேற்கொள்ளப்படுமெனவும்,இது தொடர்பாக அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகநாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளுமாறும் சானதிபதிக்கு அனான் அழைப்பு விடுத்துள்ளார்.

### வார்த்தை....

தெரிவித்திருப்பது, உண்மை சார்ந்த நிலையைப் பிரதிபலிப்பதாக அமையவில்லை. இது துரதிஷ்டவசமானது தெளிவற்ற தன்மை, அவரின் அரசாங்கத்தினுள் காணப்படும் முரண்பாடுகள், பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்குத் திட்டவட்டமாக நடவடிக்கை எடுப்பதாக விடுக்கும் அறிவிப்புக்களைத் தவிர்ந்த அவரின் இயலாத் தன்மை ஆகியவைதான் சமாதான நடைமுறையை மீண்டும்ஆரம்பிக்கப் பிரதான முட்டுக்கட்டைகளாக உள்ளன.

வேறு எவரிலும் பார்க்க, வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மக்கள் மோதலுக்கு அமைதித் தீர்மானம் ஒன்றைக் காணவேண்டும் என்று ஏங்குகின்றார்கள். 10.06.2004 அன்று தமிழ்த்தேசியப் பாராளுமன்றக் குழுவிற்குக் கொடுத்த உறுதிமொழிக்கு இணங்க தற்போது கிடைத்த வாய்ப்பைத் தவற விடாது இடைக்கால தன்னாட்சி அதிகார சபை முன்மொழிவுகள் மீது சமாதானப் பேச்சுக்களை விடுதலைப்புலிகளுடன் ஆரம்பித்துச்சமாதான நடைமுறையை முன்னெடுத்துச் செல்லும்படி சனாதிபதியை தமிழ்மக்கள் பலமாக வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றார்கள்.

நடப்பு சமாதான நடைமுறையைப் பற்றி திரிவுபடுத்தப்பட்ட தகவல்களைத் தெரிவிப்பதற்கு அரசாங்கங்களின் தலைவர்கள் பங்குபற்றிய ஐக்கியநாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தை ஒரு மேடையாக சனாதிபதி பயன்படுத்தியுள்ளார் என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்ட விரும்புகின்றது. சமாதான நடைமுறையை முன்னெடுத்துச் செல்வதற்கு சனாதிபதி எண்ணியிருக்கும் நடவடிக்கைகள் பற்றி தெளிவாகக் கூறப்பட்டிருப்பது நம்பகத்தன்மையைக் கட்டி எழுப்புவதற்குப் பெரிதும் பங்களிக்க முடியும் தற்போதைய இக்கட்டான நிலை தொடரக்கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கட ற்றொழி....

சமாசத்தில் நடைபெற்ற பேராளர் மாநாட்டில் கலந்து சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இன்று எமது கடற்தொழிலாளர்கள் சகல வழிகளிலும் பின்தள்ளப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். தொழில் ரீதியாக நவீனத்துவம் பெறாதவர்களாக இருக்கின்றனர். இந்நிலையில் இவர்களை வளம்படுத்தி கடல்வளத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்தக் கூடியவர்களாக மாற்றவேண்டிய நிலை இன்று உருவாகியுள்ளது. எனவே கடற்புலிகளின் அனுசரணையுடன் கடற்றொழிலாளர் சமாசத்தால் கடற்றொழிற் கல்லூரி ஒன்று வெகுவிரைவில் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு பெரும் பங்காற்றியிருக்கிறார்கள். இந்த நிலையில் முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் பல முக்கிய வேலைகளைச் செய்திருக்கிறது. இன்று யுத்தம் ஓய்ந்திருக்கிறது. சமாதான காலம் பிறந்திருக்கிறது. இன்றைய நிலையில் முல்லைத்தீவின் உயர்ச்சிக்கு சமாசம் பெரும் பணியாற்றியிருக்கிறது. இதற்கான எமது ஒத்துழைப்பும் என்றும் இருக்கிறது. அதே வேளை தொழிலாளர்கள் தமக்குக் கிடைக்கின்ற கடன் வசதிகளை மிகவும் நல்ல முறையில் பயன்படுத்தி உச்சப் பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். (லோ,தீ)

## பாரஊர்தி தடம் புரண்டது

வெலிக்கண்டலிலிருந்து கண்டாவளை செல்லும் வீதியில் முதலாவது மதகுக்கு அருகே ஈருருளி ஒன்றுக்கு வழிவிட்டுக் கொடுக்க முயன்றவேளையில் வீதியின் அகலம் போதாமையால் பாரஊர்தி வீதியை விட்டு விலகிக் குடைசாய்ந்தது.

இதில் பாரஊர்தி ஓட்டுனரும் மற்றொருவரும் சிறிய காயங்களுக்குள்ளாகினர்.

### தியாகி. லெப்....

கோணாவில் முன்பள்ளியிலும் விசுவமடுவில் மாவீரர் நினைவு மண்டபத்திலும் பூநகரியில் தம்பிராய்க் கிராமத்திலும் முல்லைத்தீவில அலங்கரிக்கப்பட்ட விசேட பந்தலிலும் வட்டக்கச்சி மாவீரர் நினைவு மண்டபத்திலும், நினைவு நிகழ்வுகளும் அடையாள உண்ணா விரதமும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்ட இதேவேளை மன்னார் பேருந்து நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்ட விசேட அலங்கார மண்டபத்திலும், திருகோணமலை இந்து கலாசார மண்டபத்திலும் அஞ்சலிக் கூட்டங்களும் அடையாள உண்ணாவிரதங்களும் நடைபெற்றுள்ளன. இந் நிகழ்வுகளில் பொது மக்கள்பாடசாலை மாணவர்கள் அரச, அரசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், போராளிகள்எனப் பெருந்திரளானோர் பங்குபற்றினர். இதே இடங்களிலும் ஏனைய பகுதிகளிலும் இன்றும் நாளையும் விசேட நினைவு நிகழ்வுகளும் அடையாள உண்ணாவிரதங்களும் நடைபெறவுள்ளதோடு யாழ்ப்பாணம் நல்லூர் முருகன் ஆலயமுன்றலில் அடையாள உண்ணாவிரதமும் மாலை விசேட கலை நிகழ்வுகளும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.(14,08,12,20,27சோ,கு,மி,)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.